நடைபெறுகிறது!
A/L 87 Day Class
பிரிவு II
8.00 - 9.00 PHYSICS
9.00 - 10.00 CHEMISTRY
10.00 - 11.00 ZOOLOGY
11.00 - 12.00 BOTANY
(PURE & APP
10.00 - 12.00 (MATHS
New Master
Institute
B.M.C. Lane, Jaffna.

# சஞ்சீவி

விலை ரூ 2/-

அறிவு - ஆக்கம் - அபிவிருத்தி

Day Class
Physics:
Chemistry:
Zoology:
Botany:
Pure & Applied Maths:
New Master
Institute
B.M.C. Lane, Jaffna

மலை:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஐப்பசி மீ 15 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஸபர் பிறை 27 (01-11-1986) SANJEAVY. REGENERATIVE TAMIL WEEKLY சிகரம் :41

## கருத்துக் கலசம்

மயூரா

இன்று தீபாவளி. இந்துக்களின் பிரதான கொண்டாட்டங்களில் ஒன்று. அதற்குச் சமய ரீதியாக, அறிவியல் ரீதியாக, கலாசார ரீதியாகப் பல்வேறு விதமான அர்த்தங்கள், தத்துவங்கள் உள்ளன.

உள்ளே காணப்படும் சஞ்சீவித் தீபாவளிச் சிறப்பிதழில் கட்டுரையாளர்கள் தீபாவளியைத் தனித்தனியான கோணங்களில் நோக்கியுள்ளார்கள்.

மொத்தத்தில் அதர்மத்தின் தோல்வியையும், தர்மத்தின் வெற்றியையும் மக்களுக்கு ஞாபகமூட்டும் ஒரு நாளாகவே தீபாவளி விளங்குகிறது.

அத்தோடு மனிதன் தன்வாழ்வில் எதிர்நோக்கும் துன்பமும், துயரமும், இன்னலும் நிறைந்த இருண்ட காலம் நிலையானது அல்ல. அந்த இருள் நீங்கி வாழ்வில் ஒளிமயமான காலமும் வரும் என்று தென்பு தரும் தினமாகவும் அதனைக் கொள்ளலாம்.

ஈழத் தமிழர்களை இன்று அதர்மம் ஆட்டிப் படைக்கிறது. தர்மம் எப்போது செங்கோல் ஓச்சும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

தீபாவளியைப் பண்டிகையாகக் கொண்டாடித்தான் அதன் தத்துவத்தை உணர வேண்டும் என்பதில்லை. கொண்டாட்டம் இல்லாமலே அதன் உட்பொருளை உணர்ந்து கடைப்பிடித்தால் அதுவே போதுமானது.

இந்துக்கள் தமது புறவாழ்க்கையில் தம்மைத் துன்புறுத்தும் அதர்மத்தை, ஆணவத்தை தோற்கடிக்க வேண்டும் என்று நினைப்பது போல—

தங்கள் அகவாழ்க்கையிலும் அதர்மத்தையும், ஆணவத்தையும், அதிகார வெறியையும் களையவேண்டும்.

ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு மனிதனும் தன்னிடம் உள்ள ஆணவம், அகங்காரம், பொறாமை, பகைமை ஆகிய அரக்க குணங்களை ஒழிப்பது அவசியம்.

அப்போதுதான் எமது மண்ணில் தர்மம் தலைதூக்கும். அந்தத் தர்மத்தின்மூலம் வெளியார் விளைவிக்கும் அதர்மத்தை முறியடிக்கலாம்.

நீங்கள் ஒவ்வொருவரும் இன்று அதனை முயன்று பார்த்து நித்தமும் தொடர்வீர்களா?

அவ்வாறு செய்யின் வெற்றி உங்கள் பக்கமே!

### சுபநேரம்

01-11-1986
சனிக்கிழமை
சுபநேரம்:
3.03 முதல் 4.33 வரை
ராகுகாலம்:
9.03 முதல் 10.33 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
தீபாவளிப் பண்டிகை
கேதார கௌரி விரதம்
அமாவாசை விரதம்

திங்கள் முதல்

# யாழ். ஆஸ்பத்திரி ஸ்தம்பித்துவிடும் அபாய கட்டத்தில்

## கொழும்பிலிருந்து தூதுக்குழு நிலையை நேரில் அறிவதற்கு

யாழ்ப்பாணம், நவம்பர் 01

ஷெல் தாக்குதலுக்கு எதிராக யாழ். ஆஸ்பத்திரி ஊழியர்கள் நடத்திவரும் போராட்டம் சூடு பிடிக்கிறது. அதன் காரணமாக ஆஸ்பத்திரி ஸ்தம்பித்துவிடும் அபாயக் கட்டம் தோன்றியுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் ஆஸ்பத்திரி சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட உள்ளன.

இதேவேளை யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஊழியர்கள் உயிராபத்தின் மத்தியில் பணிபுரிவதை நேரில் கண்டறிவதற்காக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தூதுக்குழு ஒன்று கொழும்பிலிருந்து இங்கு விஜயம் செய்ய உள்ளது. தாதிமார் சங்கத் தூதுக் குழுவும் இங்கு வர இருக்கிறது.

யாழ் ஆஸ்பத்திரியின் சகல கிளினிக்குகளும் எதிர்வரும் திங்கள் முதல் மூடப்படும்.

வழமையான சத்திர சிகிச்சைகள் செய்யப்பட மாட்டா.

யாழ் ஆஸ்பத்திரி பணியாளர்கள் மேற்கண்ட தீர்மானத்தை எடுத்திருக்கின்றனர்.

நேற்றுப் பிற்பகல் நடந்த ஆஸ்பத்திரி பணியாளர் கூட்டத்தில்ஷெல் தாக்குதல்களை ஆட்சேபித்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது குறித்து நீண்ட நேரம் ஆராயப்பட்டது.

கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட 5 தீர்மானங்களும் வருமாறு;

1. யாழ். ஆஸ்பத்திரியின் சகலமருத்துவ கிளினிக்குகளும் நவம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் மூடப்படும்.

2. அவசர, விபத்து சம்பந்தபட்ட நோயாளர்களே வார்டுகளில் அனுமதிக்கப்படுவர்.

3 அவசர, விபத்து நோயாளர்களுக்கே சத்திர சிகிச்சை அளிக்கப்படும்.

4. மருத்துவ மாணவர்களுக்கு அளிக்கப்படும் ஆஸ்பத்திரி போதனை நிறுத்தப்படும்.

5. வெளிநோயாளர் சிகிச்சை பிரிவு வழமை போல் நடத்தப்படும்.

இதனிடையில் ஆஸ்பத்திரி நிலையை நேரில் ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கக் கொழும்பில் இருந்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கக் (GMOA) குழு ஒன்றும், வண. முருத்தெட்டுவ தேரர் தலைமையிலான தாதிமார் சங்கத் தூதுக் குழுஒன்றும் அடுத்தவார நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வர உள்ளன.

யாழ் நிலையை நேரிற்

(8ம் பக்கம் பார்க்க)

## இன்றுமுதல் இலவச சிகிச்சை

மூளாய் கூட்டுறவு போதனா வைத்தியசாலையில் இன்று முதல் வெளிநோயளர்களுக்கு இலவச வைத்திய சேவை வழங்கப்படவுள்ளது என வைத்தியசாலைச் சங்கம் அறிவித்துள்ளது.

ஆரம்ப அனுமதிக் கட்டணமாக 5 ரூபா மட்டுமே அறவிடப்படும் தொடர்ந்து வரும் சேவைக்கு நோயாளிகள் பணம் செலுத்தத் தேவையில்லை என்றும் தெரிவித்துள்ளனர்.

(உ - 5)




# விடுதலை இயக்கங்களை செயலிழக்கச் செய்வது யார்?

## 'ஈரோஸ்' கேள்வி

யாழ்ப்பாணம், நவ. 1

எந்த விடுதலை அமைப்பும் சக விடுதலை அமைப்பைத் தடைசெய்யும் உரிமையை பெற்றிருக்க முடியாது.

ஈழப் புரட்சி அமைப்பு (ஈரோஸ்) நேற்று விடுத்த அடுக்கை ஒன்றில் இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''இயக்கங்களை செயலிழக்கச் செய்வது யார்?'' என்ற தலைப்பில் விடுக்கப்பட்ட அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

வன்னிப் பிராந்தியத்தில் தம்மைச் சரணடையுமாறு தமிழீழ விடுதலைப்புலிகள் வற்புறுத்தியதனால் தமது செயற்பாடுகள் அனைத்தையும் இடைநிறுத்திவிட்டதாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் அறிக்கைவிடுத்துள்ளது.

விடுதலை அமைப்பானது போர்க்குணம் கொண்ட மக்கள் கூட்டத்துடன் வேலைத்திட்டங்களினுடாக தம்மை இணைத்துக் கொள்ளத் தவறும் போது செயலிழந்து பொகும் என்பதே வரலாறாகும்.

இவ்வகையில் தானாக செயலிழந்து போகும் தன்மையை நிராகரித்து செயற்கை முறையில் பலவந்தமாக செயலிழக்கச்செய்வதென்பது - மக்களினதும் ஏனைய விடுதலை அமைப்புகளினதும் வன்மையான எதிர்ப்பைச் சம்மாதிக்கச் செய்வதோடு, ஈழப்போராட்டத்தையும் திசை திருப்பியதாக்கிவிடும்.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தினர் தங்களின் பலவீனங்களையும் தங்களுக்கு எதிரான அச்சுறுத்தலையும் மக்கள் முன் வைத்து விமர்சனம் செய்யாமல் தங்கள் செயற்பாட்டை இடைநிறுத்தம் செய்வதென மேற்கொண்ட தீர்மானமானது, ஓர் இயக்கம் இன்னொரு இயக்கத்தின் செயற்பாடுகளைத் தடைசெய்யும் அதிகாரம் பெற்றுள்ளது என்பதை ''அங்கீகாரம்'' செய்வதாகவே அர்த்தப்படுகிறது.

இம்முடிவு போராட்டப் போக்கிற்கு முரணானதும் முற்றிலும் தவறானதும் ஆகும்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமானது தனது உறுதியற்ற அரசியல் நிலைப்பாடுகளையும், பொருத்தமற்ற இராணுவத்திட்டங்களையும் களைவதுடன் உள்ளும் புறமும் நடத்திய படுகொலைகளையும் விமர்சனம் செய்து மக்கள் முன் வெளிப்படுத்தி புதிய போக்கைக் கடைப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 'ஷெல்' அதிர்ச்சியினால் ஆசிரியை மரணம்

யாழ்ப்பாணம், நவ. 1

'ஷெல்' தாக்குதல் அதிர்ச்சியில் ஆசிரியை ஒருவர் மரணமானார்.

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகாவித்தியாலய ஆசிரியையான திருமதி பரமேஸ்வரி சதாசிவம் என்பவருக்கே இப்படி மரணம் சம்பவித்தது.

இவர் சென்ற 29 ஆம் திகதி இருதய நோயாளியான தனது கணவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. ஆ. சதாசிவத்தை அழைத்துக் கொண்டு யாழ் ஆஸ்பத்திரி வந்தார்.

அன்று யாழ் நகரில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலையும் இறந்தோரின் சடலங்களையும் திருமதி பரமேஸ்வரி சதாசிவம் கண்டார். அதனால் அதிர்ச்சியடைந்து மயக்கம் அடைந்த அவர் சென்ற 30 ஆம் திகதி காலமானார்.

(உ-எ)

# வியாபார மொத்த வரி

## தமிழீழ செயலகம் அறவிடும்

## புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1

தமிழ் பிராந்தியங்களில் உள்ள வர்த்தகர்கள் வியாபார மொத்த விற்பனைவு வரியை (பி. ரி. ரி.) தமிழீழசெயலகத்திலேயே செலுத்த வேண்டும்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவுறுத்தல் விடுத்திருக்கிறார்கள்.

எதிர்வரும் டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடையும் கால் ஆண்டிலிருந்து வியாபார மொத்த விற்பனவு வரியை தமிழீழ செயலகத்தில் செலுத்த வேண்டும் என்றும் —

இதற்குரிய படிவங்கள் டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் சகல வர்த்தகர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும் என்றும் புலிகள் விடுத்த அறிக்கைஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டம் வெற்றி பெற்று தமிழீழ நிர்மாணத்திற்குரிய செயற்திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் பிராந்தியங்களின் சிவில் நிர்வாகங்கள் படிப்படியாகதமிழீழ நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வரப்படுகின்றன. தமிழீழ நிர்வாக அமைப்பின் கீழேயே தமிழீழ பிராந்தியங்கள் நிர்வாகிக்கப்படுவதால் ஸ்ரீலங்கா அரசின் எந்தவொரு நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் அல்லாமல் தமிழீழ நிர்வாக கட்டுப்பாட்டின் கிழேயே தமிழீழ மக்கள் ஒவ்வொருவரையும் இயங்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

1986/87 வரி மதிப்பீட்டாண்டிலிருந்து சகலவரு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம். நவ. 1

ஆண்டு ஆறு புலமைப் பரிசிற் பரீட்சைப் பெறுபேறுகள் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

இப்பெறுபேறுகளை பாடசாலை அதிபர்களிடம் கையளிப்பதற்காக யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் இன்றும், நாளையும் திறந்திருக்கும் என்று கல்வித்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

# மட்டக்களப்பில் நான்கு தாக்குதல்கள்

மட்டக்களப்பு, நவ. 1

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று நான்கு இடங்களில் ஆயுதப் படையினர் மீது போராளிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

### முதலாவது மோதல்

மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில் நேற்றுக்காலை 11. 30 மணியளவில் ரோந்து சென்ற அதிரடிப்படையினர் மீது ஏறூரில் வைத்து போராளிகள் கிரனேட் வீசினர்.

இதைத் தொடர்ந்து செங்கலடி பகுதி வெறிச்சோடியது.

### இரண்டாவது மோதல்

நேற்று மாலை 4. 30 மணியளவில் களுவாஞ்சிக் குடியில் இருந்து அம்பலாந்துறை நோக்கி வந்த ஆயுதப்படையினரை, பளுகாமத்தில் வைத்து போராளிகள் எதிர்கொண்டனர். இருதரப்பினருக்கும் இடையே அரை மணித்தியாலம் வரையில் சமர் இடம்பெற்றது.

இதில் 3 அதிரடிப் படையினர் காயமடைந்தனர். அவர்கள் உடனடியாக கொழும்புக்கு விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்டனர்.

### மூன்றாவது சம்பவம்

நேற்று மாலை 4. 45 மணியளவில் மட்டக்களப்பு-வாழைச்சேனை வீதியில், பொலிஸ் நிலையத்தில் இருந்து நடந்து வந்த அதிரடிப் பொலிஸ் படையினர் மீது போராளிகள் கிரனேட் வீசித் தாக்குதல் நடத்தினர். எவரும் காயம் அடைந்ததாக அறிவிக்கப்படவில்லை.

இ. போ. ச. ஊழியர் ஒருவரை அவரின் வீட்டில் வைத்து படையினர் கைது செய்து சென்றனர்.

### நான்காவது தாக்குதல்

மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போவுக்கு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகள் மூவர் பலி?

கொழும்பு, நவ.1

காரைநகர் முகாமை அண்டிய கடல் பகுதியில் நீருக்கு அடியில் வெடிகுண்டுகளுடன்சுழியோடி வந்த மூன்று போராளிகளை படையினர் சுட்டுக் கொன்றதாகப் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் நேற்று அறிவித்தன.

கடற்படையினரின்சுழியோடிகள் நீருக்கு அடியில் வைத்து மூவரையும் சுட்டுக் கொன்றதாகவும்—

அந்த மூவரிடமிருந்தும் 75 கிலோ நிறையுள்ள வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 4 பொலிஸார் காயம்

கொழும்பு, நவ. 1

வெல்லாவெளிப் பொலிஸ் நிலையத்துக்கு படகு ஒன்றில் சாப்பாடு கொண்டு சென்ற பொலிஸார் மீதுநேற்று போராளிகள் ரொக்கட் தாக்குதல் நடத்தினர்.

இதனால் நான்கு பொலிஸார் காயமடைந்தனர். (உ-1)

## குண்டுச் சத்தங்கள்

கல்முனை, நவ. 1

பெரிய போரதீவு பளுகாமம் பகுதியில் நேற்று மாலை தொடங்கி இரவு 9 மணிவரை ஒரே குண்டுச் சத்தங்களும் துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்ததாக கல்முனையில் இருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

ஹெலிக்கொப்டர்களும் அப்பகுதியை வட்டமிட்ட வண்ணம் இருந்தன.

கல்முனையில் இருந்து சுமார் பதினைந்து மைல் தொலைவில் பெரிய போரதீவு, பளுகாமம் பகுதிகள் உள்ளன.

அங்கு இடம்பெற்ற குண்டுச் சத்தங்கள் கல்முனை வரைக் கேட்டன என்றும் தெரியவருகிறது. (உ-எ)

## அஞ்சலி

வியாழக்கிழமையன்று கோட்டை முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் அகால மரணமான மத்திய கல்லூரி மாணவன் விபுலானந்தனின் பூதவுடலுக்கு பெருந்திரளானோர் அஞ்சலி செலுத்தினர்.

கஸ்தூரியார் வீதியிலுள்ள அவரது வீட்டிலிருந்து கோம்பையன் மணல் மயானம் வரை தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன.

யாழ் குடாநாட்டிலுள்ள பாடசாலை மாணவர்கள் பெருந்திரளாக வந்து மலர்வளையம் சாத்தி தமது அஞ்சலியை செலுத்திச் சென்றனர்.

புதுமையும் எழிலும் நிறைந்த பல்சுவை வார இதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANIAMS

16, Modern Matket, Jaffna.

தீபாவளி வாழ்த்துக்கள்

சகலவித பிடவைத்தினிசுகள், கூறைச்சேலைகள், சிறுவர்கள், ஆண், பெண் அனைவருக்கும் ஏற்ற பெல்ஸ், மிடிஸ்கேட் மற்றும் றெடிமேட் உடைகளுக்கும்

மணியம்ஸ்

16, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.



இன்றைய இளைஞர்களுக்காக விசேஷ தீபாவளி வெளியீடாக

உஷா மினியில்

Commando Leopards புகழ்
LEWIS COLLINS...IN

**COBRA MISSION**

இதுவரை நீங்கள் பார்த்திருக்கவே முடியாத அதிநவீன ஆயுதங்கள் கொண்ட தாக்குதல் படம்



தீபாவளி வாழ்த்துக்கள்

கல்கி, கலைமகள், குமுதம், மங்கை, பொம்மை ஆகியவற்றின் தீபாவளி மலர்கள் குறைந்த எண்ணிக்கையிலேயே எமக்குக் கிடைக்கவுள்ளன. எனவே வேண்டியவர்கள் முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

எம்மிடம் 1987ம் ஆண்டிற்கான கலண்டர்கள், டயறிகள் அனைத்தும் விசேட கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் விற்பனையாகின்றன.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

யாழ்ப்பாணம்

தொலைபேசி: 23631 தந்தி: Books Jaffna.



எங்கள் விநியோகஸ்தர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும், மற்றும் பாவனையாளர்களுக்கும்

அன்பான தீபாவளி

நல்வாழ்த்துக்கள்

**வைற்பீல்ட் இன்டஸ்றீஸ்**

சங்கானை.



இருள் நீங்கி ஒளிவீச
இனிய தமிழ் மக்களுக்கு எம் இனிய
தீபாவளி வாழ்த்துக்கள்

**J.C.C.**

உங்களை அன்புடன்
வரவேற்கிறது!

உரும்பராய், உரும்பராயை அண்டிய கிராமங்களில் வாழும் இனிய தமிழ் மக்களே! உங்களுக்குத் தேவையான பல சேவைகளை J.C.C நிறுவனம் வழங்குகின்றது.

I வாடகைக்கு

தகரப்பந்தல்கள், புதிய இரும்புக் கதிரைகள் விரும்புகின்ற நேரத்தில் உங்களுக்கு வழங்குவார்கள்.

II விற்பனைக்கு

சகலவிதமான கட்டடப் பொருள்கள், மின்சார உபகரணங்கள், சைக்கிள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள், விவசாய உரவகைகள், கிருமிநாசினிகள், சகலவிதமான காய்கறி விதைகள், தையல் வேலைக்கான சகலவித பொருள்கள், கைவேலைப்பொருள்கள், சகலவிதமான அலங்காரப் பொருள்கள், எவர் சில்வர் சாமான்கள், பரிசளிக்க உகந்த சகல விதமான பொருள்கள், பிளாஸ்ரிக் சாமான்கள், சகலவிதமான பாடசாலை அப்பியாசப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், பிறந்தநாள் வாழ்த்து மடல்கள், பண்டிகை வாழ்த்து மடல்கள், சகலவிதமான இந்திய வாரசஞ்சிகைகள், கற்பகத்தின் கூடைகள், கைவேலைப் பொருள்கள், பனங்கட்டி, ஜாம், கோடியல் இன்னும் சகலவிதமான பொருள்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்டட அமைப்பிற்கு

பின்வரும் சேவைகள் நியாய கட்டணத்தில் வழங்கப்படும்.

கட்டட பிளான் (Plan) கட்டட விபரணம் (B.O.Q)கட்டட செலவு தொகை [(Estimate) நீலப் பிரதிகள் (Blue Prints), கணக்குப் பார்த்தல் (Certificate of Bills) கட்டட மேற்பார்வை (Building Supervision) கட்டட அமைப்பு (Building Construction)

அலுவலக நேரம் காலை 7.30 முதல் மாலை 4.30 வரை.

**J.C.C. நிறுவனம்**

உரும்பராய்ச் சந்தி,
உரும்பராய்.



தீபாவளிப் பரிசு

மில்க்வைற் பாடசாலை பாக்

மாணவ மணிகளே,
உங்கள் சீருடைகளை
அதி வெண்மையாக்க
நுரைவளம் கூடிய

மில்க்வைற்

நீலசோப்பை

வாங்கிப் பாவியுங்கள்.
200 மேலுறைகளை
சேகரித்துக் கொடுத்து
சிறந்த
தீபாவளிப் பரிசாக
அழகிய
பாடசாலை பாக் ஒன்றைப்
பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்
சவர்க்காரத்தொழிலகம்
யாழ்ப்பாணம்.






**A/L 87**

DAY CLASS

பிரிவு III

விரைவில் ஆரம்பம்

**New Master Institute**

B. M. C. Lane, JAFFNA.



தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

**ROCK** ENGINEERS & CONTRACTORS IN WATER SUPPLY WORKS

**குழாய்க் கிணறுகள்**

[மெஷின் மூலம்]

உங்கள் நிலத்தில்

1. மண் கண்டமா
2. கழிக் கண்டமா
3. கற் கண்டமா
4. காவி நீரா
5. உப்பு நீரா
6. நீர் போதாதா

என்ன பிரச்சினையென்றாலும் எம்முடன் கலந்தாலோசியுங்கள். மழைகாலம் என்றாலும் தேவையான ஆழத்துக்குத் துளைத்து (Drilling) போதிய தண்ணீர் பெற்றுத் தருவோம்.

24 மணித்தியாலங்களுக்குள் 24 மணித்தியாலமும் தண்ணீர் பெறக்கூடிய கிணற்றை அமைத்துத் தருவோம். தொடர்பு கொள்ளவும்.

**றெக் எஞ்ஜினியர்ஸ்**

பருத்தித்துறை வீதி, கோப்பாய்.



தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**அப்பிகாபதி**

பன்ஸி குட்ஸ்

66, பெரியகடை, யாழ்ப்பாணம்.

எங்களிடம் நடன அமைப்புக்கேற்ற சகல அலங்கார நகைகளும் (இமிடேசன் நகைகள்) பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி: 23437



வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**

தீபாவளி நல்விருந்தாக
கலர்பிலிம் சுருள் கழுவி படமாக்குவது.

1 நாளில் — ரூபா 6-00
1 கிழமை — ,, 5-00

கழுவுவது மட்டும் (Developing only) ரூபா 30/-

301, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23067


## அரசாங்க அலுவலகங்களில்....
"சிகதி"

### மினி பஸ் கட்டணம்

யாழ் விவசாயிகளுக்கு நுவரெலியா விதை உருளைக்கிழங்கு விநியோகிக்க யாழ் செயலகத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தீர்மானத்துடன் உடன் செயற்பாடு வேண்டும். அத்துடன் விநியோகத்தில் சரியான ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டும். சென்ற காலங்களில் விவசாயிகள் பணத்தை சில கூட்டுறவுச் சங்கங்களில் செலுத்திவிட்டு பின்னர் விதைகிழங்கை பெறுவதில் பல கஷ்டத்திற்கு உள்ளானார்கள். ஆனால் செல்வாக்குடன் சென்ற சிலர் விதை உருளைக்கிழங்கைப் பெற்றனர். மற்றவர்கள் ஏமாந்தனர். அந்த நிலை இம்முறையும் இருக்கக் கூடாது.

* *

இங்கே உள்ள திருமலை அகதிகளுக்கு வழங்கப்படும் உதவிகளை அரசாங்கம் உடன் நிறுத்தத் தீர்மானித்துள்ளதாகவும் அகதிகள் புனர்வாழ்வு அமைச்சுப் பகுதியினர் மீளாய்வு செய்த பின்னரே மீண்டும் வழங்குவதுபற்றி முடிவு செய்யப்படும் எனவும் தெரிகிறது. ஆனால் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இந்நிலையில் உள்ளோர்க்கு மேலும் கூடுதலான வசதிகள் உதவிகள் வழங்கப்படுகின்றன. இதனால் அரசு தனது உறுதியான இனப்பாகுபாட்டை மேலும் துலாம்பரம் ஆக்குகிறது என்றே கருதவேண்டும். அல்லாவிட்டால் ...?

* *

பாடசாலை அதிபர்கள் பாடசாலை மாணவர்கள் பாதுகாப்புப் பற்றி முன்னேற்பாடான சில நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். 1000 மீற்றர் பாதுகாப்பு வலயத்திற்குள் இருக்கும் பாடசாலைகளின் நிலைப்பாடு என்ன? உறுதிப்பாடான நடவடிக்கைகளை இனியும் தாமதிக்கலாமா? இதே போல்பாதுகாப்புவலயத்திற்குள் அரச திணைக்களங்களும் தங்கள் நிலையைச் சீராக்கிக் கொள்ள வேண்டும். திணைக்கள அதிகாரிகள் இதில் நடவடிக்கைகள் மேற்கொள்ள முடியாதா?

* *

பந்தோபஸ்து அமைச்சு திணைக்களத்திற்கு ஆக்க வேலைகள் கிடையாது. எல்லாம் அழிப்பு வேலைகள் தான். இது சம்பந்தமாக ஏதாவது விவரக் கோவைகள் இருக்குமோ என்பதும் சந்தேகம். அத்துடன் இராணுவத்தினரின் மரணங்கள் சம்பந்தமாக ஆள்மாருட்டங்களும் இடம்பெறுகின்றன. இதனால் முன்னுக்குப் பின் முரணாகவே நடக்க வேண்டிய நிலைப்பாட்டிற்கு பந்தோபஸ்து அமைச்சர் தள்ளப்பட்டுள்ளார். எல்லாம் அரசியல் குதர்க்கத்தினால் வந்த வினை.

* *

தனியார் மினிபஸ் போக்குவரத்துக் கட்டணங்களில் வெவ்வேறு சேவைகளில் வெவ்வேறு சட்டணங்கள். எந்த விதமான ஒரே சீரான கட்டண விகிதம் இல்லை என்று பல பிரயாணிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். எரிபொருள் விலை இறங்கிய பின்னரும் இந்நிலை தொடர்வதை தனியார் போக்குவரத்துச் சங்கம் உடன் கவனிக்கவேண்டும்.

* *

தொடர்
கட்டுரைகள்

—

தொடர் கட்டுரைகள், தொடர் அம்சங்கள் சில இடமின்மை காரணமாக இம்முறை வெளிவரவில்லை. அடுத்த வாரம் பிரசுரமாகும்.

--பிரதம ஆசிரியர்

### மாநாடு

புதுடில்லி, அக். 31

ஜனவரி 23 24 ஆம் திகதிகளில் புதுடில்லியில் இலங்கை இனப் பிரச்சினை குறித்து மாநாடு ஒன்று நடைபெறும்.

இந்த மாநாடு சர்வதேச ரீதியில் நடத்தப்படும் வெளிநாட்டு எம்பிக்கள் பலர் இம்மாநாட்டில் கலந்து கொள்வர்.

இப்படி மாநாட்டை ஒழுங்கு செய்துவரும் ஜனதா தலைவரான டாக்டர் சுப்பிரமணியசுவாமி சொன்னார். (உ-எ-ஜ)


மாணவர்களுக்கும்! ஆசிரியர்களுக்கும்!

**தீபாவளி**

நல்வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கிறோம்.

DIRECTOR

**New Master Institute**

B.M.C. Lane, Jaffna



ல்கலைக்கழ

வெளிவாரிப் பட்டப் படிப்புகள்

கல்வியாண்டு 1987/88

பேராதனை, கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின் வெளிவாரிப் பாடநெறிகளான

- கலைமாணி (B.A.)
- விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்) B.Sc.
- சட்டமாணி (LL.B.)
- வணிகமாணி (B. Com.)

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி பெற்றவர்கள் அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விபரத்தினையும் விண்ணப்பப் படிவத்தினையும் ரூபா 10-00 செலுத்தி நேரில், தபால்மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய மாணவர்களுக்கான 2வது பிரிவு விரிவுரைகள் 16.11-86இல் ஆரம்பமாகின்றன. யாழ் நகரில் வெளிவாரி பட்டப்படிப்புகளுக்கென தனித்துவமான நிறுவனம்.

முதுகலைமாணி (M.A.) கலாநிதி (Ph. D.) பட்டம் பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் விரிவுரைகளை வழங்கும் ஒரேயொரு நிறுவனம். விண்ணப்ப முடிவு திகதி 10-11-86

உதவிப் பதிவாளர்.
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



றெருசோ ஷிப்ஸ்

**TERRAZZO CHIPS**

IMPORTED

- கலர் பவுடர் (எல்லா வர்ணங்கள்) (GERMAN AND HOLLAND)
- அலுமினியம் தகடுகள் (18g x 16g)
- வெள்ளைச் சிமெந்து
- காபரண்டம் கற்கள் (FLOOR CUTTING STONE)
- TERRAZZO மற்றும் தரைக்குத் தேவையான சகல பொருட்களும் கிடைக்கும்.

Rs. 6/75-க்கு மேல்

**றம்சன்ஸ்**

443, பழைய சோனகத் தெரு,
கொழும்பு-12
தொலைபேசி: 34411 - 31511



ஆங்கிலம் படிக்க விரும்பினால் அம்மொழியின் ஆரம்ப இலக்கணத்தை தெளிவாகக் கற்றுக்கொள்ளுங்கள்.

அதற்கு உதவி செய்கிறது,

LEARNER'S ENGLISH

லேணேர்ஸ் இங்கிலிஷ் இந்த நூல் ஆங்கில மொழியின் ஆரம்ப இலக்கணத்தை மிக இலகுவாகத் தமிழ் மொழிமூலம் உங்களுக்குச் சொல்லித் தருகிறது.

G. C. E. O/L வகுப்பு மாணவர்களுக்கும் நல்ல தேர்ச்சி தரும்.

இது ஒரு வரதர் வெளியீடு. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

ரூபா 16-00



**A/L 87**

தூய பிரயோக கணிதம்

துரித மீட்டல் பகல் நேர வகுப்பு

ஆரம்பம்: 5-11-86

7.45: காவிகள்

9.00: அட்சர கணிதம்

(கணக்குகள் மாத்திரம்)

ஆசிரியர்:

**ரவிமோகன்**

யாழ்ப்பாணம்

வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்கும் இடையில்



பெற்ரு எசன்ஸ் சப்பிளையர்ஸ் ஸ்தாபனத்தினரும்
ஊழியர்களும் தங்கள் வாடிக்கையாளர்கட்கு

**தீபாவளி வாழ்த்துக்களை வாழ்த்துகிறார்கள்**

- கேக் தயாரிக்கும் பொருட்கள்
- பொலித்தீன் வகைகள்
- குளிர்பானத் தயாரிப்புகள்
- ஐஸ்கிறீம் தயாரிப்புகள்
- சிறு கைத்தொழிற் பொருட்கள்
- வாசனைத் திரவியங்கள்

மற்றும் அச்சகத்திற்கேற்ற தீந்தை வகைகள்
பாடசாலை உபகரணங்கள், தேசிய கூட்டுத்தாபன கடதாசி வகைகள்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்

**PETTAH ESSENCE SUPPLIERS**

233, Power House Road,
JAFFNA.
T'Phone: 24823


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிச் சிறப்பிதழ்

தீபாவளிச் சிறப்பிதழ்

## அடையாளங்களுக்கு அப்பால்

“ஆண்டில் ஓர் நாளைக்குத் தீபாவளி — அதை யாவரும் கொண்டாட வேண்டும் என்றார்”

—இளவல் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் பாட்டொன்றில் வரும் வரிகள் தீபாவளி- கொண்டாடப்படவேண்டிய ஒரு திருவிழா; புத்துடை அணிந்து பது மணம் பொலியும் சூழலிலே மங்கலம் துலங்கும்படியாகக் கொண்டாடப்பட வேண்டிய திருநாள்! இவ்வாறு நமது சமூகம்கருதுகிறது

தீபாவளி என்றால் என்ன? அது நரகாசுரன் அழிந்த நாள். யார் இந்த நரகன்? இவ்வாறு நரகம் என்பது என்ன? நம்மிற் பல பேர் இன்று நடத்திக் கொண்டிருக்கும் வாழ்க்கை தான் நரகம் அடிக்கப்பட்டும் நொருக்கப் பட்டும் துவைக்கப்பட்டும் மறிக்கப்பட்டும் முறிக்கப்பட்டும் நசிக்கப்பட்டும் பசிக்கப்பட்டும் உரிக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் மனிதர்கள் துன்பப்படும் நிலை தான் நரகம் அந்த நரகத்துக்கு மூலகாரணராக இருப்பவர்கள் தான் நரகர்கள். நரகத்தின் அதிபதிகள் - நரக அசுரர்கள் இந்த அசுரர்கள் அமைதியின் பகைவர்கள்; அழிவின் அன்பர்கள்; அநியாயங்களின் மொத்த வியாபாரிகள்

கண்ணபிரான் நரகாசுரனைக் கொன்றான் என்றால் அது எங்கோ ஓர் இடத்தில் எப்பொழுதோ ஒரு காலத்தில் நடந்து முடிந்துபோய் விட்ட தனி நிகழ்ச்சி அன்று; அது ஓர் அடையாளம்; எல்லா இடங்களுக்கும் எல்லாக் காலங்களுக்கும் பொருந்தமான ஒரு நிரந்தரமான அடையாளம் அடையாளங்களுக்குப் பின்னால் உள்ள அர்த்தங்கள் முக்கியமானவை; உற்று நோக்கிஉணரத்தக்கவை.

**எமது கொண்டாட்டங்கள் போரையும் வெற்றியையும் நினைவூட்டுகின்றன . . .**

இன்று தீபாவளி கொண்டாடும் நாம் சில



நாட்களின் முன் நவராத்திரி கொண்டாடினோம். இன்னுஞ் சில நாட்களிற் கந்தஷஷ்டி கொண்டாடுவோம்; பிறகு விளக்கீடு கொண்டாடுவோம் இப்படியாக எங்களுடைய கொண்டாட்டங்கள் பல; அநுட்டானங்கள் பல; விழாக்கள் பல; சடங்குகள் பல

கொண்டாட்டம் ஒவ்வொன்றும் எதனையோ எமக்கு நினைவூட்டி வைக்கிறது நவராத்திரியின் இறுதியில் 'மானம்பு' நடைபெறுகிறது இது மகிடாசுர சங்காரத்தை நினைவூட்டுகிறதென்று கூறுகிறார்கள் வட இந்தியாவிலே விஜயதசமியிலன்று இராவணனுடைய கொடும்பாவியை எரிக்கிறார்களாம். இராமபிரான் இராவணனைக் கொன்று வென்றமையை இது குறிக்கிறது இராவண சங்காரம் இவ்விதம் நினைவு கூரப்படுகிறது

இனி வரப்போகும் கந்தஷஷ்டி ஆறு நாள் விரதம். உண்ணாவிரதமாக இதனை அநுட்டிப்போர் உள்ளனர். கந்தஷஷ்டியின் கடைசிநாள் சூரன் போர். சூரன் இராட்சதபலம் மிகுந்தவன். கொடிய படைக்கலங்கள் பலவற்றினை உடையவன். மாயையின் மைந்தன் சூதும் வாதும் அவனுக்குக் கைவந்த கலைகள் அவன் தேவர்களைச் சிறையிட்டு வருத்தி வந்தானும்

'அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரன்' சூரனை வென்றான். சூரன் உடல் அற வாரி சுவறிட வேலை ஏவினன் — இவ்வாறு புராணங்கள் போதிக்கின்றன

கந்தஷஷ்டியின் உச்சக்கட்டம் சூரன் போர் அந்த நோன்பின் பயன் அந்தப் போராட்டத்தை நினைவுகூருதல் போலும்!

கார்த்திகையில் வரப்போகிறது. விளக்கீடு விளக்கீடும் ஒரு பெரும் போர்தான் விளக்கீட்டிலன்று ஒளிக்கும் இருளுக்கும் போர் சோதியே, சுடரே, சூழ் ஒளிவிளக்கே என்று ஒளியின் பெருமையை ஏற்றிப் போற்றும் பெருவிழா விளக்கீடாகும்

நம்மிடையே வழங்கும் கொண்டாட்டங்கள் பலவும் நினைவு விழாக்களின்

**இ.முருகையன்**

தன்மையைப் பெற்று விளங்குகின்றன. போர்களையும் அவற்றில் ஈட்டப்படும் வெற்றியையும் அவை நினைவூட்டி நிற்கின்றன.

அந்தப் போர்கள் எப்படிப்பட்டவை? நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கும் போர்கள், அவை அறத்துக்கும் மறத்துக்குமிடையே, நியாயத்துக்கும் அநியாயத்துக்குமிடையே, உரிமைக்கும் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தீபாவளியின் தத்துவம்

'தீமை செய்பவருக்கு நன்மையைச் செய்' என்று சீனாவிலிருந்த தத்துவஞானி கொன்பியூசியஸ் மக்களுக்குப் போதித்து வந்தார்.

'தீமை செய்பவர்களுக்கு நன்மையைச் செய்யும்படி கூறினால் நன்மை செய்பவர்களுக்கு என்ன செய்வது?' என்று கேட்டார் அதே நாட்டில் அதே காலத்தில் வாழ்ந்து வந்த லயோ—ரஸ் என்ற இன்னுமொரு தத்துவஞானி

மனித உணர்வின், மனிதப் பண்பின் அடிப்படைத் தத்துவத்தினை இவ்வாறு நோக்கினார்கள் இந்த இரு தத்துவஞானிகளும்.

அவ்வாறே பிரபஞ்சத்தில் நீதியும் அதர்மமும் தலைதூக்கும் பொழுது, தான் அவதரித்து அவற்றை அழிக்கும் சக்தியாகச் செயற்படுவதாக ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறுகிறார்

தானே எல்லாமாகி நிற்பதால் எம்மொவ்வொருவரின் உள்ளேயும் தான் நின்று செயற்படுவதாகவும் அவர் கூறுகிறார் அதர்மத்தையும் அநீதியையும் எதிர்த்துப் போராட, தர்மத்தின் பாற்பட்ட செயல்முறையினையே கீதை கூறுகிறது.



**நவாலியூர் நா. சச்சிதானந்தன்**

இதனை நாம் எமது புற வாழ்வில் மாத்திரமன்றி அகவாழ்விலும் கடைப்பிடித்தாக வேண்டும்.

அகவாழ்வின் வெளிப்பாடுதான் புறவாழ்விற் காணப்படுவது எமது உள்ளத்தில் நாம் நீதியையும், தர்மத்தையும் கடைப்பிடிக்கும் பொழுது அநீதி. அதர்மம் என்ற இருள் நீங்கி விடும். உள்ளத்தின் இருள் நீங்கி ஒளியேற்றும் தத்துவமே தீபாவளியின் அடிப்படைத் தத்துவமாகும்.

'தேஷாமே வானுகம் பார்த்த மஹமக்ஞானஜம் தம நாசுயாம்யாதம பாவஸ்தோ ஞான தீபேன பாஸ்வதா' என்கிறது கீதை இதன் கருத்து 'நான் அவர்களுக்கு அருள் இரங்கி அந்தக் கரணத்தில் வீற்றிருந்து மெய்ஞ்ஞானச் சுடர் விளக்கால் அஞ்ஞானத்துதித்த ஆரிருளை அகற்றி விடுகிறேன்' என்பதாகும்.

ஆகவே இறைவனின் அருள் ஒளிமூலம் எமது அஞ்ஞானத்தால் ஏற்படும் அநீதியும் அதர்மமும் நிறைந்த செயல்களை நீக்குவோமாக *

### நலமே வாழ்வோம்!

மாயவனே மகிழ்வதனை மீட்டு அன்று
மக்களினைச் சாந்தியுடன் வாழ வைக்கத்
தீயவனும் அசுரனையே ஒழித்த இந்தத்
தீபாவளி நாளினிலே தியானஞ் செய்து
தூயவராய்த் தொடர்ந்து பணி ஆற்றி நின்று
தரணியிலே தர்ம ஒளிப் பாதை சென்று
நேயமதை மனுக்குலத்தில் நாங்கள் கொண்டு
நன்மையெல்லாம் பெற்றிங்கே —
- வாழ்வோம் நலமே!

நாயன்மார்கட்டு ப. மகேந்திரராசன்

## ஆண்டியும் கொண்டாட வழி செய்வோம்

**- கௌரி கணேஷநாதன் -**

பாலா: அப்பா! கார்த்திகை மாதம் முதலாந்திகதி சனிக்கிழமை தீபாவளி வருகிறது. எனக்கு பட்டாசு வெடிகள், மத்தாப்பு வாணங்கள் வாங்கித் தருவீர்களா?

மாலா: அப்பா! அண்ணாவிற்கு வாங்கிக் கொடுக்கும் அத்தனையும் எனக்கும் தரவேண்டும்

அப்பா: பிள்ளைகளே சரி, வாங்கித்தருகிறேன்.

பாலா: அப்பா, தீபாவளியை ஏன் இந்துக்கள் கொண்டாடுகிறார்கள்?

அப்பா: மகனே! அதற்கு ஒரு கதை உண்டு

(பாலா மாலா இருவரும் ஒருமித்த குரலில்) கதையா, அப்பா இப்பவே சொல்லுங்கள்

அப்பா: முன்னொரு காலத்திலே நரகாசுரன் என்ற அசுரன் ஒருவன் இறைவனை வழிபட்டுக் கடுந்தவம் புரிந்து இம்மூவுலகையும் ஆளும் வரம் பெற்றிருந்தான். அதன் பின் போரிலே மண்ணுலகையும் பாதாள உலகையும் வெற்றி கண்ட அசுரன் விண்ணுலகம் சென்று தேவர்களையும் அடிமைப்படுத்தி சிறையிலிட்டான் தேவர் தலைவனை இந்திரனும், பூவுலகரிஷிகளும் இக்கொடுமைகளை விட்டு ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவிடம் சென்று முறையிட்டனர். அவர் அசுரனை அழிக்கப்புறப்பட்டார். இருபக்கமும் கடும்போர் மூண்டது அசுரனின் கொடிய தாக்குதலால் சிறிது சோர்வு அடைந்த பரமாத்மாவுக்கு சத்தியபாமா ஊக்கமும் உதவியும் அளித்து தேரோட்டியாகச் சென்றாள்.

பாலா: அப்பா! சத்தியபாமா யார்?

அப்பா: சத்தியபாமா கிருஷ்ண பரமாத்மாவின் தேவி.

மாலா; அப்பா மிகுதிக்கதையைச் சொல்லுங்கள்.

அப்பா: சத்தியபாமா பகவானின் கையிலிருந்த சக்கரபாணத்தை நினைவூட்டி இறுதி ஆயுதமாக அதனைப் பாவிக்கச் செய்து நரகாசுரன் என்ற கொடியவனை அழித்து எல்லோரையும் சிறைமீட்டார்

அசுரன் இறக்கும் தறுவாயில் பகவானிடம் இறுதி வரம் ஒன்றைக் கேட்டான். "நான் இறக்கும் இன்றைய தினத்தை மக்கள் யாவரும் நானென்னும் அகங்காரம், ஆணவம், பொறாமை போன்ற குணங்களை விட்டொழிந்த நாளாகக் கருதுதல் வேண்டும். எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்தி அழுக்கு நீங்கித்தூய்மையடைந்து இறைவனை எவர் வழிபடுகிறார்களோ அவர்களை நீர் ஆசீர்வதிக்க வேண்டும்" — இவ்வாறு நரகாசுரன் கேட்டுக் (6 ஆம் பக்கம் பார்க்க)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

**தீபாவளி நல்வாழ்த்துக்சள்!**


**மானிப்பாயில்**

பாதுகாப்பான சூழலில்
சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்

உலகின் எந்தப் பாகத்துடனும் நொடிப் பொழுதில் தொடர்பு கொள்வதற்கு

**★ International Communication Complex ★**
**MANIPAY.**

★ உள்நாட்டு வெளிநாட்டு தொலைத் தொடர்பு
★ ரெலக்ஸ் வசதி
★ இரவு-பகல் எந்நேரமும் சேவை
★ தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே நிறுவனம்




★ வெளியூர், வெளிநாடுகளிலிருந்து உங்களுக்கு வரும் ரெலக்ஸ்தொலைபேசிச் செய்திகள் உங்கள் வீடுகளில் விநியோகிக்கப்படும்

**இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்**
**282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.**

★ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான சேவை
★ வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது இலங்கை நாணயத்தை வீணாக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை நேரில் செய்து கொள்ளலாம்.
★ உங்கள் சேவையே எமது நிறைவு.



எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது தீபாவளி வாழ்த்துக்கள்
சுபகாரியங்களுக்கு ஏற்ற
பட்டுப் பிடவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்

**சீமாட்டி**
122, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 8, மத்திய சந்தை சுன்னாகம்.

**சீமாட்டி பான்சி குட்ஸ்**
158, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



கால் நூற்றுண்டுக்கு மேல்
ஐவுளி உலகின் நவீன முன்னோடிகள்
ஆரம்பம்: 1959

அன்பு கலந்த
**தீபாவளி வாழ்த்துக்கள்**
★
**கணேசன் ஸ்ரோர்ஸ்**
63, 78, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
ரெலிபோன்: 24025



எமது வாடிக்கையாளர் அனைவருக்கும்
எம் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

இந்தியன் சிங்கப்பூர்
மற்றும் வெளிநாட்டுச் சேலைகள் திருமண வைபவங்களுக்கேற்ற
காஞ்சிபுரம், மணிப்புரி
சிறுவர் ஆடைகளும்
உங்கள் மனத்திருப்தியுடன் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்
★
**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**
(ரகுமான் பில்டிங்)
77, பெரியகடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிப்படை கோட்டைக்குள் மீதி நாதியற்று நாட்டுக்குள்

ம. க. அ. அந்தனிசில்

போர்க்களத்திற்குள் பருந்து பறந்தோடி வந்துகொண்டிருக்கிறது.

உதயசூரியன் உச்சிவானம் நோக்கி மெல்ல மெல்ல நகர நகர— தற்பரை, விநாடி, நாழிகையென நேரம் விரைந்தோடி கரையக் கரைய- பெரும் காற்றாகி, புயலாகி, சூறாவளியாகி, சண்டமாருதமாய் மாறி சமராடி நிற்கும் சங்கிலி மன்னன், பருந்து செருக்களம் புகுவதைக் கண்டதும் சிலிர்மெனச் சிலிர்க்கிருன் அவன் அங்கம் துடிக்கிறது, பங்கம் விளைவிக்க பறங்கிப்படை மேலும் வருகிறது போலும் என அவன் மனம் எண்ணிச் சினக்கிறது.

பறந்து வந்த பருந்திடம் விரைந்து சென்ற துணைத் தளபதிக்கு சங்கதி சொன்ன பருந்து மீண்டும் கடுகதி வேகத்தில் குதிரைமீது பண்ணைத்துறைக்குப் பறக்கிறது...

நாட்டின் மீது கன்னக்கோல் வைத்திட வந்த எதிரிகளிடையே மின்னலெனச் சுழன்ற மன்னனின் போர்வாள் சற்று ஓய்ந்து கொள்ள, சாய்ந்து வீழ்ந்த பறங்கியரின் உடல்கள் மேலாய் புரவி மீது பாய்ந்து வந்த மன்னனிடம், பருந்து தன்னிடம் சொன்ன சேதியை ஒப்புவிக்கிருன் துணைத்தளபதி கரைப்பிட்டி வன்னியன்

து த.: வேந்தே!

மன்னன்: அறிவேன்... கிறுக்குப் பிடித்த பறங்கியர் பண்ணைத்துறையில் வந்திறங்கியிருப்பதாகப் பருந்து சொல்லியிருக்கும்...

து. த.: ஆமாம் வேந்தே! பண்ணைத்துறையில் இறங்கிய பறங்கிப் படையொன்று ஆரியகுளம் கீழ்த்திசையில் வந்து கொண்டிருப்பதாக...

மன்னன்: (அவசரமாக) ஆரியகுளம் கீழ்த்திசையிலா? மிக நெருங்கி விட்டார்கள். அப்படியானால் பருந்தின் தாமதம் ஏனோ?

து த: வேந்தே! முதலில் ஐந்து பாய்க்கப்பல்களில் வந்திறங்கிய பறங்கிப்படை நேரகாலத்துடன் இங்கு வருவதற்காகப் புறப்பட்டுவிட்டது மேலும் ஐந்து பாய்க்கப்பல்கள் கடலில் சற்றுத் தொலைவிலே தென்பட்டதால் அதை நோட்டம் விட்டதில் பருந்து சொற்பம் சுணங்கிவிட்டது.

மன்னன்: (ஆத்திரத்துடன்) பத்துக் கப்பல்களில் பறங்கிப்படை... இன்னும் எத்தனை பறங்கி வந்தாலும் நம் வீரம் உறங்கிவிடாது. வேங்கை நிகர் எம்மை வெள்ளைப்பிசாசு வெற்றி கொள்ளவும் முடியாது.

### பறங்கியரை வெட்டி சமாவாகு தேவர் வெற்றி

ஆமாம் மற்றைய பறங்கிகள் எங்கே?

து த: மண் கோட்டைக்கு போயிருக்கிருர்களாம் மன்னு... அவர்களைக் கண்காணிக்க அங்கு பருந்து பறந்தேகியுள்ளது!

மன்னன்: ஓ! பாதிப் படை கோட்டைக்குள் மீதிப்படை நாட்டுக்குள்...

து.த: ஆமாம்வேந்தே!

மன்னன்; யுத்தத்திலும் நாம் சத்திய நெறியைக் கடைப்பிடித்தோம்... மரபு காத்தோம்...ஆனால் எதற்கும் ஓர் எல்லையுண்டு பறங்கியர் மிக மிக வரம்பு மீறிவிட்டார்கள் நாடு பிடிக்க வந்தவன் நீதி நியாயம் நாடானென்பதை நாடி பிடித்தா நாமறிய வேண்டும்? இனி நாமும் எல்லை தாண்ட வேண்டியதுதான்.

து த: சுலபமாக நுழைகிருர்கள் மன்னு...

மன்னன்: அவர்களுக்குப் பாதிவழியில் வலை விரிக்கப்படும்... களத்தில் ஒற்றர்கள் நிற்கிருர்களா?

து த: பனங்கிளி நிற்கிறது வேந்தே!

மன்னன்: வேளக்காரப் படைத் தளபதியை நான் அழைப்பதாகக் கோட்டைக்கு தகவல் அனுப்பவும்!

து த: உத்தரவு மன்னு...

(ஏலவே வல்வெட்டித் துறையில் பாளையமிட்டிருந்த வேளக்காரப் படையும், கல்லிடைத்தேவன் தலைமையிலான இராமநாதபுரம் படை அணியும் நல்லூர்க் கோட்டைக்கு அழைக்கப்பட்டு அங்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது)

துணைத் தளபதியிடம் மன்னன் சொன்ன சேதியறிந்த பனங்கிளி குதிரை மீது நல்லூர் கோட்டை நோக்கிப் பறக்கிறது

போர்க்களத்தில் பறங்கிப்படைக்கும் நல்லூர்ச் சேனைக்கும் மும்முரப் போர் நிகழ்ந்துகொண்டிருக்கிறது... வாட்போரில் ஈடுபட்டிருக்கும் பறங்கிப்படையை விடத் துப்பாக்கி ஏந்திய பறங்கிப் படை தூரத்தே நின்று அடிக்கடி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணமிருக்கிறது... சங்கிலி மன்னன் தன் புரவி மீது அங்குமிங்கும் ஓடிப் பாய்ந்து துப்பாக்கி குறி பார்க்கும் பறங்கியர் மீது கவனக்கலைச் சுழற்றியடித்து வருகையில் அங்கே ஓரமாய் மந்திரி பரநிருபசிங்கனும் அப்பாவு முதலியும் கைகட்டி நிற்பதைக்கண்டு ஆச்சரியமுற்று, 'அண்ணு நீங்கள் போரிடவில்லையா?' என்று கேட்கவும் அதற்கு மந்திரி 'இது புது மாதிரியான போராக இருக்கின்றதே? இதில் எப்படி நாம் போர் புரிவதாம்?' என்று சொல்கிருன்.

அதற்கு சங்கிலி மன்னன் சிரித்தவாறு 'எனக்கும் இது புதுமாதிரியான போர்தான்... என்ருலும் நான் போரிடவில்லையா? நீங்களும் என்னைப்போல் செய்யுங்கள்' என்று கூறி அப்பால் நகர்ந்து கொள்கிருன்.

பறங்கியருடன் போரிட விரும்பாத மந்திரி பரநிருபசிங்கன் அதற்காக வெறும் சாக்குப்போக்குச் சொல்லியதை வஞ்சகமில்லாத மன்னனுல் உணர்ந்து கொள்ள முடியவில்லை

புதிய பறங்கிப்படையொன்று அண்மித்து வந்துகொண்டிருப்பதாக போர்க்களத்தில் போராடி நிற்கும் பறங்கிச் சேனைக்கும் தகவல் வந்ததால் அவர்கள் மத்தியில் சலசலப்பும் ஆரவாரமும் நிலவுகிறது. துப்பாக்கியும் கையுமாகத் துள்ளிக் குதிக்கிருன் பறங்கித் தளபதி அன்ரூ பூர்த்தாட் நல்லூர்ச் சேனையை எப்படியும் இன்று வெற்றி கொள்ளலாமென நினைத்துப் பூரிக்கிருன் அப்போது மன்னனின் குதிரையும் ஒருமுறை கனைத்து ஓய்கிறது அவ்வேளை...

டக்டக்... டக்டக்... டக்டக்...

குட்டியானை ஒன்று குதிரையேறி வந்ததைப் போல் வேளக்காரப் படைத்தளபதி சமரவாகுதேவன் தன் புரவி மீது போர்க்களத்திற்குள் நுழைகிருன். மன்னனை நெருங்கியதும் தன் புரவியிலிருந்து பாய்ந்திறங்கிய சமரவாகு தேவன்-

'இராஜாதி ராஜன் வாழ்க! இராஜாதி ராஜன் வாழ்க' என வாழ்த்தி நிற்கிருன்.

மன்னன்: வேளக்கார தளபதியாரே!

வே த: வேந்தே ஆணையிடுங்கள்.

மன்னன்: புதிய பறங்கிப் படையொன்று போர்க்களத்திற்குள் நுழைய வந்துகொண்டிருக்கிறது

வே த: இக்கணமே படை நடத்திச் செல்வேன் மன்னு...

மன்னன்: அவர்கள் வெடிமருந்துகளுடன் வருவார்கள்.

வே. த: அவர்களுக்கு அதை மூக்குப்பொடி ஆக்குவோம் மன்னு!

### பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (பகுதி ஒன்பது)

மன்னன்; பாதி வழியிலேயே அவர்களை...

வே த; நாதியில்லாமல் செய்கிருேம் வேந்தே!

மன்னன்; பலே பலே! சென்று வருக! வென்று வருக!

மன்னன் விடை கொடுத்ததும் சமரவாகு தேவன் அங்கிருந்து புறப்பட்டு நல்லூர் கோட்டைக்குச் சென்று தன் படைக்குத் தலைமை தாங்கி ஆரியகுளம் பக்கம் செல்கிருன் பனங்கிளி வழிகாட்டிச் செல்கிறது

சொற்பநேரம் கழித்து மீண்டும் பருந்து போர்க்களத்துக்குள் பறந்தோடி வருகிறது. மண்கோட்டையிலிருந்து பறங்கிப் படை கடலோர வழியாகப் புறப்பட்டு வடதிசை திருப்பி வந்துகொண்டிருப்பதாகப் பருந்து சொன்ன சேதியறிந்து கொதிப்படைந்த மன்னன், கல்லிடைத் தேவன் தலைமையிலான படையை வடதிசையால் வரும் பறங்கிப்படையை எதிர்கொண்டு நிர்மூலமாக்கும்படி ஆணை பிறப்பிக்கிருன் நல்லூர் கோட்டைக்கு சேதி பறக்கின்றது மன்னனின் ஆணை கிடைத்ததும் அடவேறென கிளர்ந்த கல்லிடைத் தேவன் தன் படை நடத்தி வடதிசை செல்கிருன். பருந்து வழி காட்டிச் செல்கிறது.

போர்க்களத்தில் வாட்போரில் ஈடுபட்டிருக்கும் பறங்கிப்படை களைப்பு மிகுதியால் வழமையான தந்திரோபாயத்துடன் பின்னேற பறங்கியரின் துப்பாக்கி அணி சாரமாரியான வேட்டுக்களைத் தீர்க்கிறது

டுமீல்! டுமீல்! டுமீல்!

டுமீல்...

இந்நிலையில் நல்லூர் சேனையும் வழமைபோல் தளபதி வீரமாணிக்க தேவனின் உத்தரவுக்கிணங்க பதுங்கி ஒதுங்கி அப்பால் நகர்ந்து, தூரத்தே நிலை கொண்டு ஆயுதங்களை மாற்றிக் கொள்கிறது... அப்போது சேனு வீரர்களிடம் உற்சாகமூட்டி நின்ற மன்னனை அணுகிய தளபதி.

"மன்னு! பறங்கியரின் வெடிமருந்துகளும் குண்டுகளும் இப்போதைக்கு முடிந்து போகாது. பொதிகள்

### இரு நாகங்கள் இரவில் சந்திக்கும் அந்தரங்கம்

பொதிகளாக வைத்திருக்கிருர்கள்" என்கிருன். அதற்கு மன்னன் "உண்மைதான் நாம் நெருங்கிப் போராடும் போதெல்லாம் பறங்கியரின் துப்பாக்கியணி தூரத்தே ஒடியொதுங்கி சமயம் பார்த்து துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்க்கிறது இனி அவர்களின் வெடி மருந்தும் குண்டுகளும் முடியும் வரை காத்திராமல் துப்பாக்கி அணியையும் நாம் சுற்றி வளைத்தால்...

தளபதி: பொருத்தமான யோசனை மன்னு... ஆனால்...

மன்னன்: புரிகிறது, நம் வீரர்களை நாம் வீணே காவுகொடுக்க முடியாது: எனினும் அதை கவனமாகக் கையாளுவோம்...

தளபதி: தங்கள் சித்தம் மன்னு!

மன்னன்: ஆமாம்... போர் தொடங்கி பத்து நாட்களாகின்றன. இது வரை காக்கைவன்னியனை இந்தப் பக்கமே காணுமே... ஏனோ?

தளபதி: வேந்தே! ஊர்காவற்றுறையில் பறங்கியர் கரையிறங்கக் கூடுமெனக்கருதி ஊர்ப் படை ஒன்றைத் திரட்டி அங்கே அவர் தயார் நிலையில் இருப்பதாக தகவல் கிடைத்தது...அதன் பின் எதுவும் அறிய முடியவில்லை மன்னு...

மன்னன்: (ஆச்சரியத்துடன்) அப்படியா? உண்மையில் வன்னியன் ஒரு நாட்டுப்பற்று மிக்க வீரர் தான்...

காக்கை வன்னியன் பறங்கியருடன் போர் புரியவிரும்பாததாலேயே போர்க்களத்துக்கு வரவில்லை அதை தளபதியும் மன்னனும் எப்படி அறிவார்கள்?

இவ்வேளை போர்க்களத்துக்குள் கழுகு வேகமாகப் பறந்து வருகிறது. மன்னனும் தளபதியும் கழுகு வருவதை அவதானிக்கிருர்கள்... மன்னனை அண்மித்த கழுகு குதிரையை விட்டிறங்கி "வெற்றி வேந்தன் வாழ்க! வெற்றி வேந்தன் வாழ்க!" என வாழ்த்தி நிற்கிறது.

மன்னனும் தளபதியும் இதை ஓரளவிற்குப் புரிந்து கொண்டாலும் "மார்த்தாண்டா இது என்ன புதிர்?" என்று மன்னன் கேட்கவும் அதற்கு கழுகு "சமரவாகு தேவரும், கல்லிடைத் தேவரும் இரு முனைகளிலும் ஜெயித்து விட்டார்கள் மன்னு... பறங்கியர் பலரும் வெட்டிச் சாய்க்கப்பட்டு விட்டனர். சிலர் தப்பியோடி விட்டார்கள்" என்று கழுகு மகிழ்ச்சி பொங்க சொல்லி முடிக்கிறது

இது கேட்டு மன்னனும் தளபதியும் ஆனந்தக் களிப்பெய்துகின்றனர். வெற்றிச் செய்தியறிந்த நல்லூர்ச் சேனை பெரும் ஆரவாரம் செய்கிறது... பேரிகை முழங்குகிறது... வெற்றி முழக்கம் ஒலிக்கிறது... சங்கிலி மன்னன் தன் கழுத்திலிருந்த முத்துமாலையைக் கழற்றி வெற்றிச் செய்தி கொண்டு வந்த ஒற்றர் படைத்தலைவன் மார்த்தாண்டனுக்கு (கழுகு) தருகிருன்

கழுகு: நன்றி வெற்றி வேந்தே... நன்றி...

மன்னன்: மார்த்தாண்டா...

கழுகு: வேந்தே...

மன்னன்: ஓடிச் சென்ற பறங்கியர் என்ன ஆனுர்கள்?

கழுகு; அறுவர் படகேறிச் சென்றதாகவும் மீதிப் பறங்கியர் மண் கோட்டைக்குள் புகுந்திருப்பதாகவும் பருந்து சொன்னது மன்னு...

மன்னன்; ஓகோ... அவர்கள் தகவல் கொண்டுபோகிருர்கள்...

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

க. சி. குலரத்தினம்

பாரதநாடு என்னும் பழம் பெருமை வாய்ந்த இந்திய தேசத்திலே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே 1957 ஆம் ஆண்டிலே சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய முப்பெரும் பல்கலைக்கழகங்கள் ஆரம்பிக்கப்பெற்றன.

இம்மூன்று பல்கலைக்கழகங்களிலும் தென்னகத்தே அமைந்த சென்னைப் பல்கலைக்கழகத்திலே முதற்பட்டதாரிகளானவர்கள் எமது தமிழீழ நாட்டவர்களான தாமோதரம் பிள்ளை அவர்களும், விசுவநாதபிள்ளை அவர்களும் என்பதோடு; அவர்களைத் தொடர்ந்து ஆண்டுதோறும் நம்மவர் பலர் அங்கு பட்டம் பெற்றும், பட்டதாரிகளுக்குப் பேராசிரியர்களாயிருந்தும், பண்பாட்டுப்பணி புரிந்தார்கள் என்பதும் மகிழ்ச்சிகரமான நினைவலைகளாகும்.

### கல்கத்தாவும் ஈழமும்

வடக்கில் வங்காளந் தழுவிய கல்கத்தாப் பல்கலைக்கழகத்திலும் ஈழவளநாட்டார் இணையற்ற தொடர்பு கொண்டிருந்தார்கள். முன்னர் பல்லாண்டுகளாக எங்கள் பிரதேசத்துக் கல்லூரிகள் பல கல்கத்தாப் பல்கலைக்கழகத்தோடு இணைக்கப்பெற்றனவாய்ப் பட்டப்படிப்பு வசதிகளை இங்கேயே செய்துகொடுத்து வந்தன

கல்கத்தாவில் தமிழ்ச் சைவக் கலாசாரம் கங்கைகொண்டசோழன் காலம் முதலாகவே கலந்து நிலவி வந்தது. இராசேந்திரசோழன் தமிழ் நாட்டறிஞர்கள் பலரைக் கங்கைக்கரையில் குடியமர்த்திய வகையில், அவர்தம் தமிழ்ப் பண்பாடு வடக்கில் பரவலாகப் பரவியதும் உண்டு.

கல்கத்தாவில் பட்டதாரிகளாய் யாழ்ப்பாணத்துக்கு மீண்ட சிலர் பஞ்சகச்சம் நீண்ட சட்டை, தலைப்பாகை அணிந்து கம்பீரமாக உலாவியதும் ஒருகாலம். வீரம் ததும்பிய மயிலிட்டியில் தோன்றிய சுவாமிநாதன் அவர்கள் வங்காளப் பெரியார்கள் மதியில் வீரமுறுக்கேறி அஞ்சா நெஞ்சம் கொண்ட பட்டதாரியாக மீண்டதும், முன்னர் தாம் கல்வி கற்றதும், தமது தந்தையார் சிதம்பரநாதன் கல்வி கற்பித்ததுமான மல்லாகம் இந்துக் கல்லூரியில் அதி

### மயிலிட்டி சுவாமிநாதன் மகிமை

பராகச் சேர்ந்தார்.

மல்லாகத்தில் சைவத் தமிழ் இயக்கங்கள் தலையெடுப்பதற்கு மன்றங்கள் தோன்ற வழிவகுத்துப் பீடநடையில் இவர் கடமையாற்றிய காலத்தில், வண்டவால் என்னும் பறங்கியர் ஒருவர் கல்வியதிகாரியாகக் கடமையாற்றினுர். பயிற்றப்பெற்ற ஆங்கில ஆசிரியராய அவர் காட்டிய மிடுக்கு சுவாமிநாதன் அவர்களிடம் பலிக்கவில்லை. ஆனுல் சுவாமிநாதன் அவர்கள் அன்று நிலவிய ஒரு வழக்கத்தை மேற்கொள்ளத் துணிந்தார் அஃதாவது பட்டதாரியான ஆசிரியர்களும் கொழும்பில் ஆசிரிய கலாசாலையில் பயிற்சிபெற்ருல்தான் பூரண ஆசிரியராக மதிக்கப் பெறுவர் என்பதாம்.

### சுவாமிநாதன் முடிவு

எனவே சுவாமிநாதன் அவர்கள் அதிபர் வேலையை உதறித்தள்ளிவிட்டுக் கொழும்பில் தேஸ்டன் வீதியிலமைந்திருந்த ஆங்கில ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்தார் அக்காலத்தில் அதிபராயிருந்த ஹரிசன் என்னும் ஆங்கிலேயப் பெரியவர் சுவாமிநாதன் அவர்களை வெகுவாகக் கௌரவித்துப் பயிற்சியளித்தார்.

பயிற்றப்பெற்ற பட்டதாரியாய சுவாமிநாதன் அவர்கள்மீது கல்லூரி முகாமையாளர்கள் பலர் கண்வைத்தார்கள். சேர் இராமநாதன் அவர்கள் 1921ஆம் ஆண்டில் ஆரம்பித்த பரமேஸ்வராக் கல்லூரியில் சுவாமிநாதன் அவர்களின் சேவை பொருத்தமாயிருக்கும் எனக் கருதினுர் வளர்ந்து வந்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முகாமையாளராய கௌரவ சபாபதி அவர்கள் சுவாமிநாதன் அவர்களைப் பெரிதும் விரும்பினுர்.

அந்தக்காலத்தில் பெரிய கல்லூரி ஒன்றில் அதிபர் பதவியின் கீழ், தலைமையாசிரியர் என்னும் ஒரு பதவியும் இருந்தது கௌரவ சபாபதி அவர்களின் வேண்டுகோளை மறுக்கவிரும்பாத சுவாமிநாதன் அவர்கள், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் தலைமை ஆசிரியராய் இருந்த காலத்தில் அதற்கு அதிபராய் வந்தவர் முன்னர் காசி இந்துப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராயிருந்த சஞ்சீவராவ் அவர்களாவர் தமது பழைய ஆசானை அதிபராக வரவேற்[illegible] கியம் சுவாமிநாதன் அவர்களுக்கு [illegible]நது.

### அதிபர் பதவி

சுவாமிநாதன் அவர்கள் மானிப்பாய் இந்துக்கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, சங்கத்தானை இந்துக் கல்லூரி ஆகிய கல்வி நிலையங்களிலும் மாறிமாறிச் சேவையாற்றிய காலத்தில், சைவ வித்தியா விருத்திச் சங்கத்துப் பிரமுகரான கௌரவ சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்களின் விடாப்பிடியான வேண்டுகோளை விடுக்கமுடியாமல் சைவாசிரிய கலாசாலையின் அதிபராய் 10-11 1929 ஆம் நாளில் பதவியேற்ருர்.

சைவாசிரியர் கலாசாலையின் முகாமையாளர் கௌரவ இராசரத்தினம் அவர்களுக்கும், அதிபர் சுவாமிநாதன் அவர்களுக்கும் அந்தர்வாகினியாக ஓரிய தொடர்பு நிலவியதும் உண்டு

### வெள்ளையர் கறுப்பர்

முன்னுளில் மயிலிட்டியில் மூத்த குடிகளில் வந்தவர்களுள் இருவர் கதிரேசன் எனப் பெயர் பெற்றவர்கள். இருவரையும் மட்டிடுவதற்காக மயிலிட்டியார் அவர்களை வெள்ளையர் கறுப்பர் என வித்தியாசம் கண்டனர். வெள்ளையர் வழி வந்தவர் சுவாமிநாதன் அவர்கள் கறுப்பர் வழி வந்தவர் இராசரத்தினம் அவர்கள். கறுப்பர் கதிரேசர் கோப்பாயில் [illegible] என்பாரின் மைந்தனே இராசரத்தினம் அவர்களாவர்

இராசரத்தினம் அவர்கள் செய்த பகீரதப் பிரயத்தனத்தின் பயனுய்ச் சைவாசிரிய கலாசாலையின் அதிபராய்ப் பதவியேற்ற சுவாமிநாதன் அவர்களின் அறிவாற்றல், ஆளுமை என்பன தம் நிகரில்லாதவை. கலாசாலைப் புராண முடையாரும் அவரை அருமையாகப் புகழ்ந்து பாடியுள்ளார்

"சற்குணன் கலைவலாளன்சரித்திரப்புலமை பெற்ருேன்,சொற்பொழிவாளன், சுவாமிநாதனும் நாம முற்ருேன், மற்றவர் மதிக்க வாழ்வோன், மயிலிட்டி வாசன் மேலோன் விற்பனன் கழகமென்றும் விளங்கிட மேவுகின்ருன்"

இன்னும் சுவாமிநாதன் அவர்கள் சுற்ருர் அவைக்கண் நாவலனுய், கவிஞரும் ரசிகசிகாமணியாய், செற்ருர் நடுங்கும் திறலுடனே திருவுற்றிலங்கும் சிந்தையனுய்இருந்தமையையும்; தமிழாசிரியர் விடுதலைக் காய்த் தயங்கா நின்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

# இலக்கியத்தில் பெயர் பதித்து புனைபெயரால் புகழ் பெற்றவர்

## கனக. செந்திநாதன் நினைவுதினம் இன்று

வண்ணை சே. சிவராஜா

இலங்கையின் இலக்கிய வரலாற்றில் ஓர் உறுதியான உத்தரவாதமான இடத்தைப் பிடித்துக் கொண்ட இலக்கியவாதி திரு. கனக. செந்திநாதனின் 70 ஆவது பிறந்ததினம் இன்ருகும்.

அவர் தனது இலக்கியப் ணியால், மறைந்தும் மறக்கப்படாது இலக்கிய உள்ளங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ருர்.

1916ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி தெல்லிப்பழையிலுள்ள குரும்பசிட்டி என்னும் கிராமத்தில் பிறந்த செந்திநாதனின் இயற்பெயர் கனகசபை திருச்செல்வேன்.இவரது இயற்பெயரை விட; எழுத்துலகப் பெயரான கனக செந்திநாதன் பிரபல்யம் பெற்று திகழ்கின்றது. இவரது கிட்டிய நண்பர்களுக்குக் கூட இவரது இயற்பெயர் தெரியாமலிருந்ததில் வியப்பில்லை.

இவர் ஈழத்து இலக்கிய உலகில் தமது புனைபெயருடனேயே ஒளிவிட்டுப் பிரகாசித்தார்.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியரான செந்திநாதன் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் அபிமானத்திற்குரியவராக விளங்கியதால், தமிழ் இலக்கிய உலகில்; பண்டிதர்களுக்கும், பட்டதாரிகளுக்குமிடையே பாலமாக விளங்கினுர்.

தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளையும் இவர் கையாண்டு வெற்றியும் கண்டார் தமிழ் மாணவர்களுக்கான பாட, உபபாடப் புத்தகங்களென்ன, இலக்கியப் பணியில் சிறுகதை, கட்டுரை, நவீனம், குறுநாவல், கவிதை, நாடகம் போன்றவைகளென்ன; அனைத்திலுமே இவர் பிரகாசித்ததிஞல் பலராலும் பாராட்டப்பட்டதோடு போற்றவும் பட்டார்.

இவர் ஓர் எழுத்தாளர் மட்டுமல்லாமல், ஈழத்து இலக்கியத்துறைகள் அனைத்தையும் ஆராய்ந்து ஒரு சிறந்த அபிமானியாகவும். விமர்சகராகவும் விளங்கினுர்.

இதன் காரணமாகவே "இலக்கியச் செல்வர்" "இரசிகமணி" என்ற பட்டங்கள் இவரை நாடி வந்தன.

அணிசார இலக்கியப் பணியகமான யாழ். இலக்கிய வட்டத்தைத் தோற்றுவித்து அதனை வளர்ப்பதற்கும் வளப்படுத்துவதற்கும் உயிர்நாடியாக செந்திநாதன் விளங்கினுர். யாழ். இலக்கிய வட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் இவரது உடல், உளரீதியான உழைப்பின் மிளிர்ச்சி என்பது வரலாற்று உண்மை.

ஈழத்தின் தமிழ் இலக்கியப்பணிகளையும் வளர்ச்சிகளையும் நன்கு கணித்திருந்த எழுத்தாளரும் இலக்கிய கர்த்தாவும் இவர் அத்துடன் ஈழத்து. இந்திய தமிழ்ப் படைப்புக்களை அலசி ஆராய்ந்து சீர்தூக்கிப் பார்க்கும் வல்லமை பொருந்தியவராகவும் இரசிகமணி திகழ்ந்தார். பண்டைய இலக்கியமாயினும், நவீன இலக்கியமாயினும் இரண்டுமே இவருக்கு கைவந்த கலைகளாகும்.

ஈழத்து இந்திய இலக்கியங்கள் பற்றிய எந்தச் சவாலையுமே, புள்ளி விவரங்களுடன் பதிலடி கொடுக்க வல்லவரான இவரை சமகால இலக்கியங்களைப் பொறுத்தமட்டில்ஒருஜாம்பவானுகவே இருந்துள்ளார்.

முதிர்ச்சி பெற்ற எழுத்தாளராக இருந்தும்; இளையதலைமுறை எழுத்தாளர்களைத் தட்டிக்கொடுத்து உற்சாகமும் ஊக்கமும் அளிப்பதில் இவர் பின் நிற்கவில்லை. இன்றைய எழுத்தாளர்கள் பலரும் இவரது நிழலில் வளர்ந்தவர்களேயென்ருல் அது மிகைப்படக் கூறியதாக மாட்டாதெனலாம்.

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' என்ற இவரது ஆராய்ச்சி நூலானது எதிர்கால இலக்கிய ஆராய்ச்சியாளர்களுக்கு உதவக்கூடிய நூலென்பதில் ஐயமில்லை.

இவரது நாமம் என்றும் தமிழ் இலக்கிய உலகில் நிலைத்து நிற்கும். *

## நிழல்மரம் நடுவோம்

நிழல் மரம் நடுவோம்
நிழல் மரம் நடுவோம்
நெடுவீதி தோறும் நிழல்மரம் நடுவோம்
வெயிலாடும் வீட்டு முற்றங்கள் தோறும்
வேம்பு நின்ருடினுல் என்ன கேடா?
இலை, தழை, குழை அணையவரு தென்றல்
வாசலில் வந்து வீசினுல் கேடா?
வாளாவிருக்காதீர் எம்மக்களே
வாசல்கள் தோறும் வாழை, மா, பலாவென
வளர்பல பயன்தரு மரங்களை நடுவீர்
கார் வந்து தங்கும் கானமழை பெய்யும்
ஊர் எங்கும் உயர்மரத் தோப்புகள்
காணுவோம்

- 'கிராமியன்'

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீபாவளிச் சிறப்பிதழ்

# தீபாவளிச் சிறப்பிதழ்

## தீவினை தீர்ந்த நன்னாள்

## தீபாவளித் திருநாள்

இன்று தீபாவளி காலையிலே எழுந்து, எண்ணெய் தேய்த்து ஸ்நானம் செய்து, புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கி, இனிப்புப் பண்டங்களை நண்பர்களுடன் சேர்ந்து உண்டு மகிழும் இன்பத் திருநாள் இ[த்]

### சிறுவர் தீபாவளி

தீபாவளி

வீடுகளில் அழகிய கோலமிட்டு தீபங்களை வரிசையாக வைத்து தீப வழிபாடு நடைபெறும் கன்னிப் பெண்களும் சுமங்கலிப் பெண்களும் தமது இல்லம் சிறக்க, இலட்சுமீகரம் நிறைக்க, வாழ்வு சுபீட்சம் கிடைக்க இறைவனைப் பிரார்த்திப்பார்கள்

'ஆண்டிலோர் தீபாவளியாமடா அதை ஆண்டியும் கொண்டாட வேண்டுமடா' என்று மூத்தோர் கூறுவர்

நரகாசுரன் என்று ஓர் அரக்கன் இருந்தான். அவன் மகா கொடியவன். எல்லா உயிர்களுக்கும் துன்பஞ்செய்து வந்தான். மக்கள் யாவரும் அவனது கொடுஞ் செயலுக்கு ஆளாகி வருந்தினர்.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யும் ஸ்ரீ மகாவிஷ்ணுவானவரிடம் இதுபற்றி முறையிடப்பட்டது. கஷ்டத்திலின்றும் காப்பவரான விஷ்ணு மூர்த்தி நரகாசுரனை வதம் செய்தார்

அந்த நரகாசுரன் உயிர் பிரியும் நேரத்தில் மகாவிஷ்ணுவிடம் ஒரு வரம் கேட்டுப் பெற்றுக் கொண்டான்.

'மஹா விஷ்ணுப் பிரபுவே! அடியேன் இதுநாள் வரை எல்லோருக்கும் இம்சை புரிந்து அவர்களை துன்பத்துக்கும் துயரத்துக்கும் ஆளாக்கினேன். சந்தோஷ வாழ்வை வாழ விடாது யாவரையும் துன்புறுத்தினேன்—அவர்களையும் துயரக் கடலில் மூழ்க வைத்தேன்.

எல்லோரும் என்னை வெறுத்தனர். ஆகவே நான் இறந்துபோன காரணத்தினால் — சந்தோஷ மிகுதியால் புத்தாடை புனைந்து, தித்திப்பு உண்டு இன்பமாய் இருக்க வேண்டும்.

இவ்வாறு அவன் கேட்ட வரத்தை அவ்வண்ணமே தந்தேன் என்று மகாவிஷ்ணு பகர்ந்தார். அன்று முதல் நரகாசுரன் இறந்த தினத்தை எல்லோரும் தீபாவளியாகக் கொண்டாடி மகிழ்கின்றனர்



எல்லோருக்கும் இன்பந்தரும் இனிய நாளாம் தீபாவளித் திருநாளை சிறுவர்களாகிய நாம் எல்லோரும் கொண்டாடி தீயவை நீக்கி நல்லன செய்யத் திடசங்கற்பம் பூணவேண்டும் ✱

நிதர்ஸன்

### தீபாவளியும் வந்ததுவே!

தீபாவளியும் வந்ததுவே
தீயவிணைகள் அகன்றனவே
தீபந்தன்னை ஏற்றி வைத்து
திருவிளக்கதனைத் தரிசித்தோம்
அம்மா தந்தார் பலகாரம்
அக்கா தந்தாள் பணியாரம்
அழகாய் நல்ல ஆடைதனை
அப்பா வாங்கித் தந்திட்டார்
அன்பாய் நாங்கள் அவர்களையே
அவனியிற் போற்றி வாழ்ந்திடுவோம்.

— ஸ்ரீதர் —

## மண்ணும் மகனும்

### தீபாவளிச் சிறுகதை

--யாழ்ப்பாணத்து மேகங்கள் கடந்த ஒரு வாரமாக வெளுத்துக் காட்சி தருகின்றன.

தமிழீழத் தபால் தலையுடன் கூடிய கடிதம் லண்டனிலிருந்து மகனும் மருமகனும், பேரப்பிள்ளைகளும் தீபாவளிக்கு வரவிருப்பதைக் கட்டியம் கூறுகின்றது.

லண்டனில் இருந்து யாழ்ப்பாணம் கடிதம் ஒழுங்காக வராது என்று எண்ணியோ என்னவோ மகன் அக்கடிதத்தைக் கொழும்புக்கு அனுப்ப, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த யாரோ ஒருவர் உள்ளூரில் அதை அஞ்சலில் சேர்த்திருக்க வேண்டும்...

அந்தக் கடிதத்தின் மெல்லியதாளை இலேசாக வருடி விடுகின்றார் பத்துவருடங்களுக்கு முன்னர் லண்டனுக்குச் சென்ற மகனை வருடியது போன்ற உணர்வு... அதே... பிரமை மனதிற்கு இதமளிக்கின்றது.

அவரது இளமைக்கால நினைவுகள் நெஞ்சிலிருந்து பொங்கிப் பிரவாகிக்கின்றன

ஆ! அப்ப தீபாவளியென்றால்... எவ்வளவு இனிமை! அந்த மாட்டு வண்டிச் சவாரி ஒன்றுக்கே தவம் இருக்க வேண்டுமே?

மகனின் காலத்தில் கூட தீபாவளி எவ்வளவு அமர்க்களப்பட்டது ...... சினிமா தியேட்டர் எல்லாம் புதிதாய் படங்கள் போட்டு... பிரமாண்டமாக போஸ்டர் ஒட்டி... ஒரே தடல்புடல்தான்!

ஆனால் இன்று! வீட்டுக்கு வீடு தியாகச் செம்மல்கள்...!! வீட்டுக்கு வீடு உறுதியின் உறைவிடங்கள்!!!

நரகாசுரனிடமிருந்து விடுதலை பெறுவதற்காக தேவர்கள் தவமியற்றினார்கள். அரசு வினைக்கும் நரக வேதனையில் இருந்து விடுதலை பெறுவதற்காக இன்று நாம் போராடுகின்றோம்

தங்களின் உயிரைக் கொடுத்து பகைவரின் உயிரைப் பறித்த நம் வீரர்கள் அமைதியாகத் தூங்கும் புனித பூமி இது.

இதில் தீபாவளி கொண்டாட இன்னும் எத்தனை காலங்களோ?

எங்கள் கலாசாரம்... எங்கள் சமயம் பாதுகாக்கப்பட இன்னமும் எத்தனை பொழுதுகளோ?

பொங்கிப் பிரவாகித்த நினைவுகள் ஏனோ ஒரு கணம் தடைப்பட...

மெல்ல எழுந்தவர் — ஒரு தீர்க்கமான முடிவுக்கு வருகின்றார்...

அதே நினைவுடன் அவசரமாக அடுத்த தெருவில் இருந்து சர்வதேச தொலை தொடர்பு நிறுவனத்தை நாடுகின்றார்.

சில நிமிடங்களில்... லண்டனில் இருந்து அவரது மகனின் குரல் கேட்கிறது...

'என்னப்பா? இந்த அதிகாலை வேளையில்... அப்படி என்ன அவசரம்''?

''இல்லைத்தம்பி! இம்முறை தீபாவளிக்கு இங்கு வா! உன்னை கண்ணாரப் பார்க்க வேண்டும் என்ற ஆசை... எனது பேரப்பிள்ளைகளை தழுவ வேண்டும் என்ற ஆசை .. எல்லாம் என்னை ஆகர்ஷிக்கின்றது ''

''எனினும் யாழ்ப்பாணப்பக்கம் வராதே! நான் கொழும்புக்கு வாறன் நீயும் அங்கிருந்தபடியே லண்டனுக்குத் திரும்பிவிடு!''

தொலைபேசி தனது கடமையை முடித்து விட்டு பழையபடி உரிய இடத்தில் அமர்ந்து கொள்கின்றது.

வீதியெங்கும் போஸ்டர்கள் ''உயிரை இழந்தோம். . உடைமையை இழந்தோம், உணர்வை இழக்கலாமா?''

சோக கீதம் இசைத்தாலும் அவை நெஞ்சில் வீரமூட்டுகின்றன

தனது வாழ்வில் முதன் முதலாக பேரப்பிள்ளைகளைக் காணப்போகும் ஆவல் அவரை துரிதமாக ஒவ்வொரு அலுவல்களையும் செய்து முடிக்க வைக்கின்றது.

நாட்கள் நெருங்க நெருங்க உள்ளத்தின் துடிப்பும் அதிகரிக்கின்றது

பனங்கிழங்கும், பனாட்டும், ஒடியல்மாவும் அவர் தேடித்தேடி வாங்கினார்

லண்டனில் பிறந்த பிள்ளைகள் இவற்றை எல்லாம் கண்டிருக்கவே முடியாதென்பது அவரது கருத்து

மானுக்கென வாஞ்சையுடன் அகலக்கரை போட்ட நூல் வேட்டியும் தேடி வாங்கி எடுத்து வைத்தார்.

அதையே திருப்பித் திருப்பிப் பார்ப்பதிலும் ஓர் ஆத்மசுகம் கண்டார்

அவரது கற்பனையில் பேரர்கள் .. தலையில் ஒன்று..தோளில் ஒன்று . கையில் ஒன்றாக ஆனந்தமாகக் காட்சிதந்தார்கள்.

ஆ! கற்பனைகூட எவ்வளவு சுகமளிக்கின்றது.

ஆக எப்படியோ நாளும் நெருங்கிவிட்டது அயலில் உள்ள எல்லோரிடமும் ஆயிரம் தடவையாவது தமது பேரரைப்பற்றிச் சொல்லிக்கொண்டு அவர்களுடன் தீபாவளி கொண்டாடுவதற்காக அவர் கொழும்பு புறப்பட்டு விட்டார்.



அந்தப் பிரமாண்ட ஹோட்டல் தமது குடும்பத்தை தமது வாரிசை . அதன் வாரிசுகளை அறிமுகப்படுத்துகின்றது

ஆவலுடன் இவர் பேரரைப் பார்த்தார்.

அதிசயத்துடன் அவர்கள் இவரைப் பார்த்தனர்.

இவர் சொல்வது அவர்களுக்கு விளங்கவில்லை அவர்கள் சொல்வதும் இவருக்குப் புரியவில்லை.

எந்தமொழி அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கருதுகின்றாரோ அதேமொழி கண்ணுக்கு முன்னாலேயே சிதைவுறுகின்றது.

எமது மண்ணின் மகிமையை விளக்கும் விதம்விதமான பலகாரங்கள் அவர்களுக்கு சுவையைத்தரவில்லை. மாறாக எறிந்து விளையாடவே பயன்படுகின்றன.

மகனுக்கு எது ஆசையுடன் வாங்கி வந்த வேட்டி அநாதரவாக ஒரு மூலையில் சுருண்டு கிடக்கின்றது.

பெரியோரைக் கனம் பண்ணு. . மூத்தோர் வார்த்தை அமிர்தம் என சிறுவயதில் படித்தவை. . அந்தப் பேரக் குழந்தைகளிடம் அர்த்தமற்று. அஸ்தமித்துப் போய் விட்டதாகவே அவர் உணர்கின்றார்...

உன்னைக்கண்டு நான் வாட...
என்னைக்கண்டு நீவாட
உல்லாசம் குன்றும்
இந்தத் தீபாவளி...

காற்றினில் கலந்து வந்த கீதம் அவரது செவிகளில் நாராசமாகப் பாய்கின்றது...

...யாழ்ப்பாணத்தை நோக்கி விரைந்த அவரது பஸ் வவுனியாவில் நீண்ட பெரு மூச்சுடன் சிறிது நேரம் தரிக்கின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

- ஜெகதீஷ் -

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது அன்பான
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

ஈழத்தின் தமிழ் இதயங்களுக்கு
ஓர் இனிமையான செய்தி!
ரெலிபோன் - ரெலக்ஸ்
சேவைகள்

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்கின்ற உங்கள் உறவினர்களை அலைவரிசைகளில் அழைத்து உடனுக்குடன் தெளிவான குரலில் உரையாட, குறைந்த செலவில் நிறைவான சேவை செய்ய முன்வந்துள்ளனர்

மைக்ரோ
கொம்யூனிக்கேசன்
ஸ்தாபனத்தார்.

ரெலிபோன் ரெலக்ஸ் சேவையில் பல வருடகால அனுபவம் பெற்றவர்களின் தொழில் நுட்ப கண்காணிப்பின் கீழ் தங்கள் உன்னத சேவையை இரவு பகல் 24 மணி நேரமும் வழங்குகின்றார்கள்.

உங்கள் தேவையே எங்கள் சேவை
மைக்ரோ கொம்யூனிக்கேசன்
கே. கே. எஸ். வீதி,
குளப்பிட்டிச் சந்தி கொக்குவில்.

எல்லோருக்கும் எங்கள்
தீபாவளி நல்வாழ்த்துக்கள்
★
எம். ரி. சோமசுந்தரம்
அன் சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தந்தி: ''பாதுகாதேவி'' தொலைபேசி: 23845

வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
எம் தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!
உங்களுக்கு தேவையான சகலவிதமான சித்த, ஆயுள்வேத மருந்துகளும், எண்ணெய் வகைகளும், நம்பிக்கையாகவும் மலிவாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
ராதா மின்சார மருந்து
தலையிடி, தடிமல், நோவு, பிடிப்புகளுக்கு
ராதா குரு தைலம்
தலையிடி, தடிமல், சுளுக்கு வாதம், சளிச்சுரம், முதலிய நோய்களுக்கு
ராதா மணி மார்க்
சந்தனாதித் தைலம்
கூந்தல் வளர்ச்சிக்கும், சிரசு ரோகங்களுக்கும் உபயோகமானது
ராதா மணி மார்க்
கேசரோக நிவாரண தைலம்
கூந்தல் உதிர்தல், பூச்சிவெட்டு, புழுவெட்டு சொடுகு முதலிய சகலவிதமான கேச ரோகங்கட்கும்
ராதா பிரமி கூந்தல் தைலம்
கூந்தல் வளர்ச்சிக்கும், குளிர்ச்சிக்கும், அகால நரையைத் தடுப்பதற்கும் உபயோகமானது.
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
53(191)கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். 22541
160 செட்டியார் தெரு, கொழும்பு, 35825

வாடிக்கையாளர்களுக்கும்
நண்பர்களுக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
172, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி:7713

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு
எமது நல்வாழ்த்துக்கள்.
மகாவிஷ்ணு கையில் சங்கு
உங்கள் கைகளில் 'சங்குமார்க்' எவர் சில்வர்ப் பாத்திரங்கள் தவழட்டும்.
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள ஒரே ஸ்தாபனம்
செல்லாசன்ஸ்
சேல்ஸ் சென்ரர்
இல. 118, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
(கடைத்தெரு பிள்ளையார் கோயில் முன்பாக)

GLORIA TRAVELS
● கனடா ● டென்மார்க்
● பிரான்ஸ் ● ஜேர்மனி
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தருவதுடன்
எமது பிரயாணமுகவர் அழைத்துச் செல்வர்.
டென்மார்க், கனடா செல்வதற்கு
உடனடி பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.
மற்றும்
பாஸ்போட், பொண்ட் (BOND), விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.
GLORIA TRAVELS
சின்னத்தம்பி அவெனியூ,
மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளிச் சிறப்பிதழ்

தீபாவளிச் சிறப்பிதழ்


உங்கள் நலன் கருதி
காலை 9 மணி முதல் இரவு 11 மணிவரை
உங்களை வரவேற்கக் காத்திருக்கின்றனர்
**ஆர். எஸ். ஆர்.**
**கிறீன் பீக்கிங் பலஸ்**
**RSR Green Peking Palace**
சீன உணவு வகைகள்
20 ரூபாவில் இருந்து 35 ரூபா வரை
கோழிப் புரியாணி
ஆட்டுப் புரியாணி 25/-
**(SNACK BAR)**
குளிர்பானங்கள், சிற்றுணவு, மதியபோசனம்
பின்வருவனவற்றுக்கு ஆர்டர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்
- திருமணங்கள்
- பிறந்த நாள் வைபவம் மற்றும் நிகழ்ச்சிகள்.

**RSR GREEN PEKING PALACE**
69, G, 4th Cross Street,
JAFFNA.



மாணவர்களுக்கும்! ஆசிரியர்களுக்கும்!
தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.
- பாடசாலை உபகரணங்கள்
- சகலவிதமான பாடநூல்கள்
- ஸ்ரேசனறிச் சாமான்கள்
- இந்திய சஞ்சிகைகள்
- புதினப்பத்திரிகைகள்
- வாழ்த்து மடல்கள்
- பிறந்ததின வாழ்த்து
- நத்தார் புதுவருட வாழ்த்து

யாவற்றையும் மலிவாகப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
**சாரதா புத்தகசாலை**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**A/L 87**
PAPER CLASS
பிரிவு I
விரைவில் ஆரம்பம்
**New Master Institute**
B. M. C. Lane, JAFFNA.



**நிப்பொன்**
- சர்வதேச தொலைத் தொடர்பு சேவை: 24 மணி நேரம்
- பிரயாணச் சேவை. விமானச் சீட்டுக்கள்
CONFIRMATION, RE-CONFIRMATION
விசா, பாஸ்போட், பொண்ட்
- யாழ் - கொழும்பு
பஸ் சேவை: ரூபா 151/—

முன்கூட்டியே ஆசனங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

தொலைபேசிக் கட்டண விபரம் 3 நிமிடங்கள்

| | | | |
|---|---|---|---|
| இந்தியா | - 199/- | ஜேர்மனி | - 260/- |
| பிரான்ஸ் | - 260/. | சவூதி அரேபியா | - 260/- |
| சிங்கப்பூர் | . 260/- | மலேசியா | - 260/- |

**நிப்பொன் ரெலி ரவல்ஸ்**
2G. ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்.   போன்: 23364 - 23866


## இயற்கையை உணர்ந்ததால்
# உருவான தீபாவளித் திருநாள்

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள் இந்துக்கள் இயற்கையின் இயக்கத்தையே உணர்ந்தவர்கள் அவர்கள்

அவர்களின் பண்டிகைகளும், விழாக்களும் இயற்கையுடன் இணைந்து உருவானவையே அவ்வகையில் தீபாவளியும்— இயற்கையின் இயல்பின் அடிப்படையிலேயே உருவானது

உலகில் சக்திக்கு மூலகாரணமாய், சக்திக்குப் பிறப்பிடமாய், ஆதாரமாய் இருப்பது சூரியன். இப்படித்தான் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

ஆனால் இந்த விஞ்ஞானிகளுக்கு முன்னர்- பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மெய்ஞ்ஞானிகளாக வாழ்ந்த எம்முன்னோர் இதனை அப்போதே உணர்ந்திருந்தார்கள்

அந்த உணர்வின் வெளிப்பாடே சூரிய வணக்கம்

சூரியனின் சக்தி கொழுந்து விட்டெரியும் ஒளிப்பிழம்பாகச் சுடர்விட்டுக் கொண்டிருகிறது

அதனால் இந்துக்களின் சூரிய வழிபாடு விசேடமாக அக்கினி வழிபாடாயிற்று

இயற்கையை ஐம்பூதங்



களாக வகுத்த இந்துக்கள் அதில்ஒன்றாக அக்கினியைக் கொண்டார்கள் இதனால் அக்கினிவழிபாடு முதன்மையானதாயிற்று.

அக்கினி - சோதி.

"ஆதியும் அந்தமுமில்லா அரும் பெருஞ் சோதி"யாக நின்றவன் எம் பெருமான்

இறைவனை தீபவடிவில் கண்ட எம்முன்னோர்கள் அவனே,

"அலகில் சோதியன்"
"சோதியே! சுடரே! சூழ் ஒளிவிளக்கே!!!
"ஒளிவளர் விளக்கே!"

—என்று பலவாறாகப் போற்றித்துதித்தார்கள்.

இவ்வாறு ஒளிவடிவாய் எங்கும் பரந்து வியாபித்திருக்கும் இறைவனை தீபத் திருநாளாக வணங்குவதற்கு இந்துக்கள் தேர்ந்த சிறப்பு நாட்கள் இரண்டு.

ஒன்று தீபாவளி மற்றையது கார்த்திகை விளக்கீடு

**தீபாவளித் திருநாள்**

தீபாவளி என்றால் தீப வரிசை என்று பொருள்

தீபங்களை வரிசையாக ஏற்றி வணங்குவதே இத்

**வித்யா**

திருநாளின் பொருள்.

தீபத்திலே சுடர் விடும் ஒளி எழுச்சியின் சின்னம்; தூய்மையின் அடையாளம்!

அது மகாசக்தியை நினைப்பூட்டுகிறது இறைவனே பிரகாசமாய் எங்கும் வியாபித்து நிற்கிறான் என்பதை அது உணர்த்துகிறது

எமது இல்லத்திலே— அகத்திலே தீபம் ஏற்றி —இருள்நீக்கி—தீபாவளியைக் கொண்டாடுகிறோம் மன அகத்திலே குடிகொண்டிருக்கும் அறியாமையாகிய இருளை அகற்றி ஞான ஒளியை ஏற்றவேண்டும் என்பதை இத்திருநாள் உணர்த்துகிறது.

அதர்ம இருளை அகற்றி தர்ம ஒளி ஏற்றுவதற்காக கிருஷ்ணபகவான் நரகாசுரனை அழித்தது இந்தத் திருநாள் தினத்தில் தான் என்பது குறிப்பிடத்தக்கது

அசுரன் அழிந்ததால்; தீமை ஒழிந்தது; மக்கள் வாழ்வில் துன்பம் தொலைந்தது; இன்பம் சூழ்ந்தது; இருள் அகன்றது; ஒளி பிறந்தது.

ஒளிபிறந்த இந்த நாளிலே வீடுகள்தோறும் விளக்கேற்றி தீபத்திருநாளாக அதனைக் கொண்டாடுவது பொருத்தமானதல்லவா? ✶

# தீபாவளிக் கொண்டாட்டம்;
# இப்போதும் அவசியந்தானா?

நாட்டு நிலைமை சீராக இருந்தபோது தீபாவளி கொண்டாட எங்கள் குடும்பத்திற்கு பணவசதி இருக்கவில்லை இப்போது நாட்டு நிலைமை சீரற்றதாக இருந்தாலும், எனது சகல மக்களும் வெளிநாடு சென்று உழைத்து பணம் அனுப்புகிறார்கள் இன்றைய சூழ்நிலையில் அடுத்த தீபாவளிக்கு நாம் இருப்போமோ இல்லையோ தெரியாது. இருக்கும்போதே தீபாவளியைக் கொண்டாட மனம் விரும்புகிறது.

இவ்வாறு சொன்னவர் தனது ஆஸ்தியைக் கரைத்து வெளிநாட்டுக்கு அனுப்பிய மக்கள் மார் தனது அஸ்தியைக் கரைக்க அங்கிருந்து வருவார்களோ என அங்கலாய்க்கும் ஒரு குடும்பத் தலைவர்

இவ்வருட தீபாவளிக் கொண்டாட்டங்கள் பற்றிய மக்களின் மனக்கோலங்களை சஞ்சீவி வாசகர்களுக்காக அறிய முற்பட்டபோதே நகரின் கடை ஒன்றில் தீபாவளிக்கான பொருள்களை வாங்கிக் கொண்டிருந்த குடும்பத் தலைவர் இவ்வாறு கூறினார்.

கடந்த வாரம் பெய்த கடும்மழையோடு யாழ் நகர வீதிகளில் காளான்களாக நடைபாதைக் கடைகள் முளைக்கத் தொடங்கி விட்டன.

## மக்களின் மனக்கோலங்கள்

வரப்போகும் தீபாவளியை இவை முன்கூட்டியே முரசறிவித்தன

இவற்றால் யாழ் நகர பஸ்நிலைய போக்குவரத்துக்கள் நெருக்கடியாயின. இக்கடைகளை அகற்றும்படி மாநகர ஆணையாளர் ஆணையிட்டார்

நடைபாதை வியாபாரிகளோ அவரது ஆணையை பொருட்படுத்தாது; சட்டை, துணிமணிகளை நடைபாதையில் தொங்கவிட்டு வியாபாரம் செய்தனர்

இது சம்பந்தமாய் ஒரு வியாபாரியிடம் வினவிய போது;

மாநகரசபையைச் சேர்ந்த எவரும் தம்மை வந்து எழுப்பவில்லை என்றும்; மேலும் நடைபாதை வியாபாரிகளுக்கென தற்காலிக நிலையமொன்றை நகரில் மாநகரசபை ஒதுக்கி வைத்தால் மக்களுக்கும் தமக்கும் வசதியாக இருக்கும் என்று சொன்னார்

**செல்வந்த நகர்**

அங்கே உடைகள்வாங்க வந்த கொழும்பில் திணைக்களம் ஒன்றில் வேலை பார்க்கும் ஒருவரைத் தீபாவளி கொண்டாட்டங்கள் பற்றி வினவினேன்

நான் தீபாவளி கொண்டாடும் நோக்கோடு இங்கே வரவில்லை. லீவு கிடைத்ததால் வந்தேன் யாழ்நகரில் ஓரே ஷெல் அடி என்றும், மக்கள் [illegible]

கள் என்றும் சொன்னார்கள். ஆனால் இங்கே பார்த்தால் யாழ்ப்பாணம் அடிக்கடி ஷெல் வந்த நகராகத் தெரியவில்லை செல்வந்த நகராகத் தெரிகிறது என்றார்.

அவரோடு கூட வந்த கையில் கூடை வைத்திருந்த அவரது மனைவியாரும் எமது சம்பாஷணையில் கலந்து கொண்டார். அவர் ஒரு பட்டதாரி ஆசிரியை.

**வாணவேடிக்கை**

எமது மக்களுக்கு தமது அன்றாட அவல வாழ்க்கையிலிருந்து ஒரு மாறுதல் தேவைப்படுகிறது. அதற்காக அவர்கள் திருவிழா, தீபாவளி என்று கொண்டாடுகிறார்கள் தமிழர் திருவிழா என்ற ரீதியில் ஆடம்பரமின்றி அமைதியாகக் கொண்டாட வேண்டும்

முன்பு தீபாவளிக்கு வாணவேடிக்கைகள் இடம்பெறும். இன்று இராணுவத்தினரின் வாணவேடிக்கையை எதிர்பார்த்து மக்கள் எச்சரிக்கையாக கொண்டாடுகிறார்கள் பட்டாசு சத்தங்களுக்குப் பதிலாக துப்பாக்கிச் சத்தங்களைக் கேட்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எமக்கு என்றார்.

**விலை மலிவு**

உடைகள் வாங்கிக் கொண்டிருந்த பாடசாலை மாணவிகள் போல் தோன்றிய இரு இளம் பெண்களிடம் தீபாவளி கொண்டாட்டம் பற்றி வினவினேன் அதற்கு அவர்களிலொருவர்;

தலை தீபாவளி கொண்டாட வேண்டிய எத்தனையோ புதுமணப்பெண்கள் இப்போ விதவைகளாக உள்ளனர் இந் நிலையில் எப்படி நாம் ஆடம்பரமாகக் கொண்டாடுவது? நாம் தீபாவளி கொண்டாட்டங்களுக்காக உடைகள் வாங்க வரவில்லை இந் நாட்களில் நடைபாதைக் கடைகளில் [illegible] மலிவாகக் கிடைக்கும் என்பதாலேயே வந்தோம் கடைகளில் 100 ரூபா விற்கும் சட்டைகள் இங்கே 50 ரூபாவுக்குக் கிடைக்கும் என்றார்

இதன் இரகசியத்தை ஒரு நடைபாதை வியாபாரியிடம் கேட்டேன். அதற்கு அவர்;

**வியாபாரி**

நாங்கள் கடையிலே சட்டைகளை வாங்கி விற்றுவிட்டு, விற்காதவற்றைத் திருப்பிக் கொடுப்போம் எமது வியாபாரம் ஒருவாரம் மட்டுமே. மேலும் எமது தொழில் முதலில்லாதது. இதனால் அதிக லாபம் வைத்து விற்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

நாங்கள் குருநாகலில் இருந்து இச்சந்தைக்கு வந்தோம். தமிழ்ப்பிரதேசங்களிலுள்ள சந்தைகளுக்கு போவது வழக்கம் மட்டக்களப்பு திருமலைப் பகுதிக்கு கடந்த 3 வருடங்களாகப் போகவில்லை. அங்கே மக்கள் கொண்டாடக்கூடிய சூழ்நிலையில் இல்லை சில இடங்களில் மக்களே இல்லை.

ரம்போ, துவக்கு, புலிச் சின்னம் பொறித்த "ரீ" சேட்டுகளே அதிகம் விற்பனையாகின்றன. கடந்த 3 வருடங்களில் இந்த வருடம் தான் எமக்கு அதிக விற்பனையும், சனத்துக்கு அதிக கொண்டாட்டமும், என்றார்.

**பெடியன் சென்றியில் மக்கள் தீபாவளியில்**

பல்கலைக்கழக மாணவர் ஒருவரிடம் தீபாவளிக் கொண்டாட்டம் பற்றிக் கேட்டபோது அவர் சொன்னார்;

மண் சுமந்த மேனியர் - 2 நாடகத்தில் காட்டியதுபோல் பெடியள் சென்றிக்கு நிக்கிற துணிவில் சனம் தீபாவளி திருவிழா கொண்டாடுது கிழக்கில் எமது சகோதரர்கள் காடுகளில் அகதிகளாக ஒளித்திருந்து தினமும் சிவராத்திரி கொண்டாட நாம் இங்கே தீபாவளி கொண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

பேட்டி: எஸ். ஜே. பி. ரட்ணதுரை


**G. C. E. (A L) 1987**
Evening Classes
PHYSICS — VARNAM
3 - 11 - 86 புதிய பிரிவுகள் ஆரம்பம்
திங்கள், வெள்ளி 3 — 4 Electricity
திங்கள், வெள்ளி 4 — 5 Mechanics
**New Master Institute**
B. M. C. Lane, JAFFNA.



எமது வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும்
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
திருமண பட்டுப்புடவைகள் மற்றும் சூட்டிங் சேட்டிங், சாறி வகைகளுக்கும் நம்பிக்கையான புடவை மாளிகை.
**சி. கே. பி. ரெக்ஸ்ற்**
74, (7) பெரியகடை,
யாழ்ப்பாணம்
போன்- 23503



எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
**PARIS TEX-S**
**பரீஸ் ரெக்ஸ்**
153, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



நண்பர்கள் வாடிக்கையாளர்களுக்கு
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்
**அமீர் ரெக்ஸ்**
73, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
நவநாகரிகத் தையல் வேலைகளில் முன்னணி வகிப்பவர்கள்
தொலைபேசி: 23021



**பிரயாண ஒழுங்குகள்**
- டென்மார்க் ● ஜேர்மனி
- குவைத்
- சவூதி அரேபியா

டென்மார்க், ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு எமது பிரயாண முகவர் நேரடியாக அழைத்துச் செல்வார்,
குவைத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு.
Cleaners, House Boys, Gardeners, House Drivers, House Cook, Sales Boys & Girls
செல்ல விரும்புவோர் உடன் நேரடியாகத் தொடர்புகொள்ளவும். பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.
சவூதி Labourersஆக செல்ல விரும்புவோரும் தொடர்பு கொள்ளவும்.
டென்மார்க், ஜேர்மனி ஆகியவற்றிற்கு அடுத்த மாதம் 10ஆம் திகதி செல்லவுள்ளோம்.
குவைத்திற்கு செல்ல விரும்புவோர் 1ஆம் திகதிக்கு முன் தொடர்பு கொள்ளவும்.

பஸ் இல. 764
பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தொடர்பு:
**N. பாலா**
திருச்செல்வம் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

- உங்கள் நன்மை கருதி தீவுப் பகுதியில் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் என்னும் பெயரில் வங்களாவடிச் சந்தியில் அமைந்துள்ளது.
- குப்பிளான் சந்திக்கு அருகாமையிலும் ஓமேகா ரவல்ஸ் & ரூர்ஸ் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் நற்செய்தி"
மில்க்வைற் நீல சோப்
புதிய வாசனையுடன், கூடிய நிறையுடன்;
எங்கும் விற்பனையாகின்றது.
விலை ரூபா 2.00 மட்டுமே!
10 மேலுறைகளை அனுப்பி
"கந்தர் சஷ்டி கவசம்"
என்ற புத்தகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

சஞ்சீவி

01 - 11 - 1986 சனிக்கிழமை

இயற்கை வாழ்வே சிறந்த வாழ்வு
நுளம்புத் தொல்லையை நீக்கி
வீட்டுத் தூய்மையைத் தரவல்லது
நீம் சுகாதார தூபம்
ஒரு பைக்கற் விலை -/50 சதம் மட்டுமே.
மில்க்வைற் - யாழ்ப்பாணம்

# இந்தியாவின் சமரசத் திட்டம்

## தமிழ் மக்கள் அபிலாஷைகளுக்கு சாதகமாக இருக்குமா, என்ன?

இலங்கை இனப்பிரச்சினையில் இந்தியா தனது நிலையை தெரிவிக்கும் கட்டம் வந்து விட்டது.

'சார்க்' சந்திப்பு சாக்குப் போக்குகளுக்கு இனியும் இடம் கொடுக்காது என்று நம்பப்படுகின்றது

அதற்கு ஏற்ற விதத்தில் தான் இந்தியாவில் கருமங்கள் இடம் பெறுகின்றன.

ஸ்ரீலங்கா அரசோ வடக்குக்கு ஒரு மாகாண சபை, கிழக்குக்கு ஒரு மாகாண சபை என்று கூறியுள்ளது மட்டுமல்ல, இரண்டின் இணைப்பையும் நிராகரித்து விட்டது.

தமிழ் பேசும் பகுதிகளைப் பிரித்து எடுத்துத் தனி மாகாணம் அமைப்பது குறித்து 18 மாத கால இடைவெளியில் அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரம் கொண்ட எல்லை நிர்ணயக் கமிஷன் ஒன்றை நியமிப்பது பற்றியும் ஸ்ரீலங்கா கூறியுள்ளது

அதிகாரப் பகிர்வு விஷயத்தில் மாகாணசபைக்கு வழங்கப்படும் விஷயங்களைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மத்திய அரசு வைத்திருக்கக் கூடியதாக இலங்கை அரசின் யோசனைகள் அமைந்து உள்ளன.

இங்கு தான் ஒற்றையாட்சியின் முழு உருவமும் தெரிகிறது.

### கூட்டணி நிலைப்பாடு

கூட்டணி தனது நிலைப்பாட்டை எழுத்து மூலம் தெரிவித்து விட்டது.

இந்திய அரசமைப்பு நிபுணர் பாலகிருஷ்ணனுடன் ஆலோசித்து கூட்டணி தனது நிலைப்பாட்டை வகுத்துள்ளது.

தமிழ் மொழி மாநிலம், அதற்கு உள்ள அதிகாரங்கள், மத்திய அரசால் கட்டுப்படுத்தப்படாமல் இருத்தல், அமைப்புக்கு அரசியல் சட்ட உத்தரவாதம் இருத்தல் — இவைதான் கூட்டணியினரால் வலியுறுத்தப்படும் அம்சங்கள்.

உள்ளும் புறமும் — குறுமுனி

### போராளிகள் நிலைப்பாடு

போராளிகள் நிலைப்பாட்டை அறிவதில் இந்திய அரசு ஈடுபட்டுள்ளது. நிலைப்பாட்டை அறிந்து பிரதமர் காந்திக்கு அறிவிக்கும் பொறுப்பு தமிழக முதல் அமைச்சருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

போராளித் தலைவர்களை முதலமைச்சர் கடந்தவாரம் சந்தித்தார். நாளை மறுநாளும் சந்திக்கப் போகிறார்கள்.

போராளிகளின் நிலைப்பாட்டை எழுத்துமூலம் பெற்றுக் கொள்வதில் இந்தியா அக்கறை காட்டுகிறது.

### பெங்களூர் சந்திப்பு

இந்தியப் பிரதமர் காந்தியும் ஜனாதிபதி ஜெயவர்த்தனவும் பேசப் போகிறார்.

இலங்கை அரசின் யோசனை, கூட்டணியின் நிலைப்பாடு, போராளிகளின் நிலைப்பாடு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து இந்தியா மாற்று யோசனையை முன்வைக்க இருப்பதாக ஒரு செய்தி.

அப்படி என்றால் அந்த மாற்று யோசனை எப்படி அமையப்போகிறது?

தமிழர் தரப்பின் எதிர்பார்ப்பிற்கு இசைவாக அது இருக்குமா? அல்லது இலங்கை அரசின் எதிர்பார்ப்புக்கு அமைவாக இருக்குமா? அல்லது இரண்டு தரப்பினருக்கும் ஏமாற்றமளிப்பதாக இருக்குமா?

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம். இந்திய அரசு அடிக்கடி உச்சாடனம் செய்து வரும் "இலங்கைத் தமிழரின் உயிர், உடைமைக்கு பாதுகாப்பாகவும் கௌரவமாக வாழ வகை செய்வதாகவும் தமிழர் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதாகவும்" — இந்திய யோசனை இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 'இந்து'வின் புத்திமதி

இதனிடையில் இந்தியாவில் பிரபலமான 'இந்து' நாளிதழ் சென்ற 28ஆம் திகதி இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தில் இந்தியப் பிரதமருக்குச் சில அறிவுரைகளைக் கூறியுள்ளது.

போராளிகளின்தொண்டைக்குள் திணிக்குமாற்போல் ஜெயவர்த்தனவுடனான பேச்சுக்கள் அமையக்கூடாது.

வடக்கு, கிழக்கு இணைப்புக்குப் பதில் சொல்லுமாற்போல இலங்கை யோசனைகளில் மாற்றத்தை இந்தியா எதிர்பார்க்க வேண்டும்.— இப்படி அத்தலையங்கம் கூறுகிறது.

அதுமட்டுமல்ல, வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றிப் பிரதமர் காந்தி கொண்டிருக்கும் தப்பெண்ணம் பற்றியும் 'இந்து' ஆசிரியர் தலையங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்குக்கும் கிழக்குக்கும் இடையே சிங்களப் பகுதி ஒன்று இருப்பது போன்று பிரதமர் எண்ணுகிறார்.

இணைப்பு விஷயத்தை பிரதமர் குறைத்து மதிப்பிடுகிறார் — இப்படியும் இந்து தலையங்கம் காலம் நேரம் அறிந்து தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார ஆலோசனைக் குழுத் தலைவர் ஜி. பார்த்தசாரதியுடன் நெருங்கிய தொடர்புடைய பத்திரிகை 'இந்து'.

ஆகவே இந்தியா, பெங்களூரில் வைத்துக் கூறப் போவதாக எதிர்பார்க்கப்படும் யோசனை எந்த அளவில் அமையப்போகிறது என்பதை ஓரளவு ஊகிக்கமுடிகின்றது.

ஆனால் தர்மிஷ்டருக்கோ தான் 1957 இல் புதைத்துவிட்டதாகஎண்ணிய இணைப்பு விஷயம் பெங்களூர்ப் பேச்சுக்களில் முக்கிய இடம்பெறப் போகிறது என்பதை எப்படி ஜீரணிக்க முடியும்?

குளுகுளு பெங்களூர் தான் பதில் சொல்ல வேண்டும்.

### தீபாவளி---

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டாரகிறோம்.

அந்த வீட்டில் செத்தவீடு நடக்க பக்கத்து வீட்டில் பால் பாயாசம் உண்ட உணர்வு ஏற்படுகிறது

எமது மக்களை நம்பி அகதியாக திருமலையிலிருந்து வந்து; இங்கே சடலைப்பைவிற்கும் இந்த சிறுவனைப் பாருங்கள் அவர்களும் முன்னர் வசதியாக இருந்து புது உடைகள் உடுத்தியவர்கள்தான் என்றார்.

கடலை விற்ற அந்த திருமலை அகதிச் சிறுவனை அழைத்து விசாரித்தேன்.

"திருமலையில்எங்கடை அப்பாவையும் அண்ணையையும் ஆமி சுட்டுப் போட்டாங்கள். அம்மாவுடனும் 5 தம்பி, தங்கச்சிமார்களுடன் இங்கை அகதிகளாக வந்துள்ளோம் நாங்கள் இருவருடங்களுக்கு முன் சிறப்பாக தீபாவளி கொண்டாடினோம். புது உடைகள் எல்லாம் வாங்கினோம் ... என்று கூறி சிறிது நேரம் மௌனமாக கடந்த காலத்தில் நடந்த தீபாவளிகளை இரைமீட்டான்.

அன்று அடிக்கடி அலம்பி அயன்பண்ணி அணிந்திருந்த சேட்; இன்று கழுத்திலும் கை மடிப்பிலும் கருமை பிடித்து கந்தலாய் கசங்கி இருக்கிறது

"இம்முறை தீபாவளி கொண்டாட முடியவில்லை என்ற கவலையிருந்தாலும் இந்த தீபாவளியால் எமக்கு கடலை வியாபாரம் கூடியுள்ளதால் சந்தோஷப்படுகிறன்.

"என் வயது பையன்கள் தங்கள் குடும்பத்தாருடன் வந்து புது உடுப்புக்கள் வாங்குவதைப் பார்க்கும்போது கவலையாகவிருந்தாலும் யாழ்ப்பாண மக்கள் புது உடுப்பை வாங்கி அணிந்து விட்டு, பழைய உடுப்புக்களை எம் போன்ற அகதிகளுக்கு அன்பளிப்பாக அளிப்பார்கள்" என்றான் அவன் பார்வையை எதிர் நோக்கமுடியது வெட்கி திரும்பி எதிரே நோக்கினேன். ★

# பாப்பரசர் முயற்சி

## சமாதானத்துக்கு அத்திவாரம்

பரிசுத்த பாப்பரசரின் வேண்டுகோளுக்கு இணங்க கடந்த 27 ஆம் திகதி திங்கட்கிழமை உலக சமாதானத்துக்கான பிரார்த்தனை தினமாக உலகமெங்கும் அனுஷ்டிக்கப்பட்டது.

பாப்பரசரின் வேண்டுகோளை ஏற்று பல நாடுகள் யுத்த நிறுத்தம் செய்திருந்தன.

இது தொடர்பாக அஸிஸியில் நடந்த வைபவம் ஒன்றில் உலக மதங்களைச் சேர்ந்த சுமார் 150 தலைவர்கள் கலந்து கொண்டனர்.

தத்தமது சமய அனுஷ்டானங்கள் மூலம் உலக சமாதானத்துக்காக அவர்கள் பிரார்த்தனை செய்தனர்.

13 ஆம் நூற்றுண்டில் உலக சமாதானத்துக்காகப் பிரசாரம் செய்த புனித பிரான்ஸிஸின் பளிங்குக் கல்லறை முன் நின்று உலக மதத் தலைவர்களுக்குப் பாப்பரசர் உரையாற்றினர்.

பிரார்த்தனையால் மட்டும் உலகில் சமாதானத்தை ஏற்படுத்திவிட முடியாது என்று அப்பொழுது அவர் தெரிவித்தார்.

அதர்மம் ஒழிந்து தர்மம் தழைத்தோங்கிய இன்றைய தீபாவளி தினத்தில் உலகில் தர்மம் தழைத்தோங்க பாப்பரசர் மேற்கொண்ட முயற்சி சர்வதேச அரங்கில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது

பாப்பரசரின் யுத்த நிறுத்த வேண்டுகோளை ஏற்று தமிழீழ போராளிகள் உட்பட பதினொரு கெரில்லாப் பிரிவுகள் யுத்த நிறுத்தம் செய்திருந்தன.

இலங்கை உட்பட 3 நாடுகளின் அரசாங்கங்கள் யுத்த நிறுத்த வேண்டுகோளுக்கு சம்மதம் தெரிவித்திருந்தன.

தமிழ் நாடு மேற்றிராணியார் டாக்டர் அருளப்பாவினூல் பாப்பரசரின் யுத்த நிறுத்த வேண்டுகோள் சென்னையில் வைத்து தமிழீழப் போராளிகள் குழுக்களிடம் கையளிக்கப்பட்டது.

கெரில்லாக்கள் யுத்த நிறுத்தம் செய்ய இணங்கிய ஏனைய நாடுகளில் லத்தீன் அமெரிக்கா, மொரோக்கோ, சூடான், அங்கோலா, கம்பூச்சியா ஆகியவையும் அடங்கும்.

லெபனுனில் கிறிஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான எல்லையில் (Green Line) யுத்த நிறுத்தம் அனுஷ்டிக்கப்பட்டது.

ஆனால் லெபனுனின் தென் பகுதியில் பலஸ்தீனருக்கும் ஷியா முஸ்லிம்களுக்கும் இடையில் சமாதான தினத்திலும் சண்டை தொடர்ந்து நடைபெற்றது.

எல் சல்வடோரில் யுத்த நிறுத்தத்துக்கு கெரில்லாக்கள் இணங்கிய போதிலும் தனது இராணுவ காவல் நிலையம்ஒன்றுகெரில்லாக்களினால் தாக்கப்பட்டதாக எல்சல்வடோர் அரசாங்கம் குற்றம்சாட்டியது

இதே போன்றே வட இலங்கையில் யுத்த நிறுத்த தினத்தில் தனது சிப்பாய் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஸ்ரீலங்கா அரசாங்கமும் அறிவித்திருந்தது.

வட அயர்லாந்தில் ஐரிஷ் குடியரசு இராணுவம் சரக்கு ரயில் ஒன்றைக் குண்டு வைத்துத் தகர்த்திருந்தது.

எனினும் உலக யுத்த முனைகளில் குறிப்பிடத்தக்க பெரிய சம்பவம் எதுவும் நடைபெறுதது பாப்பரசருக்குக் கிடைத்த பெரும் வெற்றியே.

பிரார்த்தனை தினமான கடந்த திங்கட்கிழமை வளைகுடாவைத் தவிர சர்வதேச யுத்த அரங்குகளில் இருந்து வந்த அமைதி தொடர்வதற்கு பாப்பரசர் சொன்னது போல் பிரார்த்தனை மட்டும் பயன் அளிக்காது. உலகத் தலைவர்கள் தீர்க்கமான நடவடிக்கை எடுக்கவேண்டும். ★

### உலக உலா

### யாழ்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பார்த்து அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது பற்றித் தீர்மானம் எடுப்பதே இவ் விஜயத்தின் நோக்கம் என்று தெரிகிறது.

#### சட்ட நடவடிக்கை

ஆஸ்பத்திரியில் இருந்து தான் கோட்டை முகாம் மீது ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அமைச்சர் அத்துலத் முதலி தெரிவித்ததாக ரூபவாஹினி நேற்று முன்தினம் செய்தி அறிக்கையில் தெரிவித்தது.

இதற்காக ரூபவாஹினி மீது சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகின்றன. (அ-உ-எ)

### வியாபர...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மானவரி அறவீடுகளையும் சிவில்நிர்வாகங்களைப் பெறுப்பேற்றுள்ள "தமிழீழச் செயலகம்" அறவிடும்.

வருமான வரிக்குரிய வருமானத்தை மதிப்பீடு செய்து அதற்குரிய வருமான வரியை கணித்து அதில்வரும் மொத்தவரியிலிருந்து உலக — நாடுகளில் காணப்படும் இரட்டை வரிமதிப்பு விடுப்புக் கொள்கைக்கமைய(Doule Tax Relief) சிங்கள அரசுக்கு செலுத்தப்படும் வருமானவரிக்கு விலக்களிக்கபடும்.

இது சம்பந்தமான மேலதிக விபரங்களை "தமிழீழச் செயலகம்! விரைவில் தமிழீழ மக்களுக்கு அறியத்தரும்.— இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### நீத்தார் பட்டியல்

## திருமதி பரமேஸ்வரி சதாசிவம்

(ஆசிரியை, திருநாவுக்கரசு வித்தியாலயம், வட்டுக்கோட்டை.)

திருமதி பரமேஸ்வரி சதாசிவம், ஆசிரியை அவர்கள் 30-10-86 வியாழக்கிழமை அகால மரணமானூர்.

இவர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி முன்னுள் ஆசிரியர் திரு. ஆ சதாசிவம் (B A) அவர்களது அன்பு மனைவியும், செல்வன் ஆனந்தக்குமார் (U. K.), திருமதி சுபோதினி நல்லசேசரம்பிள்ளை (ஆசிரியை போகவந்தலாவ ஹொலி றேசறி த. வி.) சிவகுமார் (U. K.) குமுதினி (ஆசிரிய கலாசாலை, கோப்பாய்) நந்தினி, அருட்குமார் (பல்கலைக் கழகம், பேராதனை.) சாந்தினி, ரவிக்குமார், பாலகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் டாக்டர் மு. நல்லசேகரம்பிள்ளை (போகவந்தலாவ) அவர்களின் மாமியாரும் வித்தியா, முதல்வன், திருவழகன் ஆகியோரின் பேத்தியுமாவார். இன்று சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவரின் ஈமக்கிரியைகள் கொற்கைத்துறை மயானத்தில் நடைபெறும்.

கலைநகர்,
சித்தன்கேணி. ஆ. சதாசிவம்

### விடுதலை---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

பிடித்துப் போராட்ட சக்தியாய் அடையாளம் காட்ட வேண்டுமென வலியுறுத்துகின்றோம்.

அத்துடன் ஈழப்பிரதேசத்தில் பெரும் பகுதியை எதிரிகள் சூழ்ந்து உள்ள நெருக்கடியான இச்சூழ்நிலையில் அனைத்து விடுதலை அமைபபுகளும் ஸ்ரீலங்கா அரசின் இராணுவத் திட்டங்களை முறியடிக்கும் வகையில்(எமக்குள் ஒருவரை மற்றவர் பலவீனப்படுத்த முயலாது) இணைந்து நின்று செயற்பட வேண்டுமென்பது கட்டாயமாகும்.

— இப்படித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ)

### மட்டக்களப்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அருகில் ரோந்து சென்ற படையினர் நேற்று குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானுர்கள்.

சைக்கிளில் வைக்கப் பட்டிருந்த குண்டு ஒன்றே வெடித்தது. ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி முழு விவரமும் தெரியவில்லை.

(உ-எ-21)

வகுப்புகள்

SCIENCE CENTRE
KARAVEDDY

க. பொ, த (உயர்) 87 ஆகஸ்ட் விவைிடை முறையில் அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்பு. விஞ்ஞான பாடங்கள் மட்டும், ஆரம்பம்- 7-11-1986.

எமது யாழ் மக்களுக்கு
தீபாவளி வாழ்த்துக்கள் கூறும்
நாம் வழங்கும் புதிய பயிற்சி
DIPLOMA IN NURSING
தாதிப்பயிற்சி டிப்புளோமா
5ஆம் பகுதி விரிவிரைகள் உடன் ஆரம்பம்
(அக்குபஞ்சர் வகுப்புக்கள்
எமது மாணவர்கு இலவசம்)
உடன் தொடர்புகொள்க:
NORTH CEYLON TECHNICAL
INSTITUTE
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24355

ELAWARASY
Chunnakam
★ இளவரசி ★
S-12, நவீன சந்தை, சுன்னுகம்.
★ கல்யாணக் கூறைகள்
★ பட்டு வேட்டி சால்வைகள்
மற்றும் சூட்டிங், சேட்டிங் நவீன டிசைன்களில்
ஆடைகள் இவற்றை ஒரே இடத்தில் பெற
இளவரசி - சுன்னுகம்.

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், அனுதாபிகள், மற்றும் தமிழ் ஈழப் போராளிகள் யாவருக்கும் எமது அன்பான
தீபாவளி வாழ்த்துக்கள்
AUM
LEELAA BAKE HOUSE
லீலா பேக் ஹவுஸ்
இந்நன்னாளில் லீலா பேக் ஹவுஸ் ஸ்தாபனத்தாரின் பிஸ்கட்டுகளைச் சுவைத்து மகிழுங்கள். லீலா பிஸ்கட்டுகள் ஒரு தமிழ் ஈழத் தயாரிப்பு. கைதேர்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் நல்லதரமாகத் தயாரிக்கப்பட்டவை. எமது தயாரிப்புகளுக்கு நீங்கள் தரும் பேராதரவுக்கு நன்றி.
மார்க்கட் சதுக்கம், சங்கானை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவெட்) லிமிட்டட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியீட்டு திகதி: 01 - 11 - 1986.
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15, Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number QJ60N 86.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org